உ

அம்பாள் துணை.

வீரையிலமர்ந்திருந்த

கவிராஜபண்டிதர்

அருளிச்செய்த

# ஆனந்தலகரி

# சௌந்தரியலகரி

மூலபாடம்.

289 THUMBOO CHETTY ST. MADRAS

இஃது

முக்கியகுறிப்புரையுடன்

சென்னை:

ஊ. புஷ்பரதசெட்டி அண்டு

கம்பெனியாரால்

கலாரத்நாகரம்என்னுந்தமது

அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

உ

அம்பாள் துணை.

வீரையிலமர்ந்திருந்த

கவிராஜபண்டிதர்

அருளிச்செய்த

# ஆனந்தலகரி

# சௌந்தரியலகரி

மூலபாடம்.

இஃது

முக்கியகுறிப்புரையுடன்

சென்னை:

ஊ. புஷ்பரதசெட்டி அண்டு

கம்பெனியாரால்

கலாரத்நாகரமென்னுந் தமது

அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

11—1000.

உ

இக்குறிப்புரை ;

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ - சிவஞானபாலைய தேசிகராதீனத்துச்

சிதம்பரம், ஈசானியமடம்

ஸ்ரீமத். இராமலிங்கசுவாமிகள் மாணுக்கருள் ஒருவராகிய

க. வ. திருவேங்கடநாயடு விஞல்.

எழுதப்பட்டது.

---

கணபதிதுணை.

தேவிசகாயம்.

# சௌந்தரியலகரி.

## பாயிரம்.

### விநாயகர் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மொழிந்தமறை நூலியற்று முகபடா மணிந்து முது ஞான தானம், பொழிந்துதன திணைமணி யென் றிருசுடரும் புனைகளிற்றைப் போற்றல் செய்வாம், வழிந்துபெரும் புனல்பரந்து வடவரையிற் றுலகேழு மேழு மொக்க, வழிந்திடினு மழியாத வபிராமி பாடல்வள மளிக்க வென்றே. (க)

### இந்நூல் செய்தற்குக் காரணம்.

இத்தனைநா ணீயிருக்க வாயிருக்க வியலிருக்க வருள்பா டாமன், மத்தனையா ளுங்கொடியை யிப்போதென் வழுத்துகின்ற வாறென் பீரேற், பித்தனையா ரேவல்கொள்வார் பித்தொழிந்தா லுரியவர்க ளடிமை யோலைக், கொத்தனையா ரேவல்கொள்ளார் கொள்ளும்போ தெவனுலே குழப்ப லாமே. (உ)

---

(க) குறிப்பு:—இணைமணி - யானையி னிருபக்கத்தும் இடப்படும்மணி. பெரும்புனல் - கடல். அபிராமி - மிகு சௌந்தரிய முடையவள். அபிராமம் - மிகுசௌந்தரம்.

(உ) மத்தன் - ஊமத்தைமலரைச்சூடிய சிவபெருமான். கொத்து - மிகுதிப்பொருட்டு. உரியவர்கள்யார் ஏவல்கொள்

அவையடக்கம்.

யாமளைதன் பெரும்புகழை யாதிமறை நாலின்வ
டித் தெடுத்த நூலை, நாமகடன் பாடலிதென் றரா
ஞர்க்கு நவிலவவர் நகைசெய் தன்றே, பாமகளை
யருகழைத்துப் பருப்பதத்திற் பொறித்திருந்த பரிசு
காட்டுஞ், சேமநிதிப் பாடலையென் புன்கவியாற்
கொள்வதவ டிறமை யன்றே. (௩)

மூன் இந்நூலை வடமொழியிற் செய்தவரை வியத்தல்.

அரன்கயிலைப் புறத்தெழுதப் படுநூலை யருந்தவத்
துப் புட்ப தந்தன், பரந்தவட வரையழுத்த வதைக்
கவுட பாதருளம் பதித்து முற்றுங், தரம்பெறு
சொல் லமுதெனப்பின் சங்கரமா முனிக்கருள வந்த
மேகஞ், சுரந்துலகில் வாடுமுயிர்ப் பயிர்தழைப்பச்
சொரிந்ததெனச் சொல்வர் நல்லோர். (௪)

---

ளார் என இயையும். எவனல் - யாவனல்; யாது காரணத்தின
லெனினும் அமையும். குழப்பல் - ஈண்டு விலக்கலின்மேற்று.

(௩) கைலையில் முற்காலத்தெழுதப்பட்டிருந்த இந்நூல் நாம
கள் கலைமகளாதலின் அவளிதயத்திற் றோன்றிற்றாக; இதனைத்
தன்னூலாகக்கொண்டு சிவபெருமானுக்கு உவப்புண்டா மென்று
படித்தாளென்பதும், பிற்காலத்தில் இது புட்பதந்த இருடியால்
மேருமலையில் எழுதப்பட்டதன்றி விநாயகக்கடவுளானும் ஒரு
கால் எழுதப்பட்டதென்பதும் சரித்திரம். இதனைப் "பிறைத
வழு மெழிதோன்றிப் பிறங்குகதிர்" என்னும் இலிங்கபுராணக்
காப்புச்செய்யுளானுணர்க. யாமளை - பச்சைநிறத்தவள். பெரு
ம்புகழை வடித்தெடுத்தநூலும் சேமநிதிப்பாடலுமாகிய இத
னைக் கொள்வது அவளருட்காரணத்தானன்றி எனது அன்பு
காரணத்தானன்று என்பதாம்.

(௪) சங்கரமாமுனி - சங்கராசாரியார்.

18084



21-4

### இந்நூலைத் தமிழ்செய்தவர் பேயர்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்ன தன்மையி னூலி னைக்கவி ராச ராசவ ரோதய, மன்ன னம்பிர மாத ராயன்வ டித்த ரும்பொருள் கூறவே, கன்ன லஞ்சிலை வேளெ னுங்கவி ராச பண்டிதன் வீரையான், சொன்ன யம்பெறு காவி யக்கவி சொல்வ லென்றுதொ டங்குவான். (௫)

### தேவி சரித்திரத் திறம்.

வடமொழியெ னும்பழைய விரிகடல்பி றந்திறைவர் மனையிடையி ருந்து சிலைமே, லிடமொடுதெ வழ்ந்துதன திடுபெயர்ச வுந்தரிய லகரியென நின்று வளர்மா, தடலரசு முன்பினுள பலமதப்ர பந்தமெனு மடுபகைது ரந்தென் மணிநா, நடமிடுபெருங்கவிதை மதகரியொ டேம்புவியை நகரிவலம் வந்த திதுவே. (௬)

பாயிர முற்றுப்பெற்றது.

---

## நூல்.

## ஆ ந ந் த ல க ரி.

### சத்தியையன்றிச் சிவந்துக்கோர் சேயலில்லையேனல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவமெ னும்பொருளு மாதி சத்தியொடு சேரி னெத்தொழிலும் வல்லதா, மிவள்பி ரிந்திடினி யங்கு தற்குமரி தரிதெ னுமறை யிரைக்குமா,

---

(௫) வரோதயன் - வரத்தாலுதித்தவன்.

(௬) இடம் - விரிவு. தேவியினுடைய வெற்றியாகிய அரசு, இது மதகரியொடு நகரிவலம் வந்தது என்க.

னவபெ ரும்புவன மெவ்வ கைத்தொழின டத்தி யாவ
ரும்வ ழுத்துதா, ளவனி யின்கணொரு தவமி லார்
பணிய லாவ தோபரவ லாவதோ. (க)

தேவி பாததூளியே முத்தொழிற்குங் காரணமெனல்.

பாத தாமரையி னுண்டு கட்பரம வணுவி னிற்பல
வி யற்றினால், வேத நான்முகன்வி திக்க வேறுபடு விரி
த லைப்புவன மடையமான், மூத ராவடிவெ டுத்த னந்
தமுது கணப ணாடவி பரிப்பமே, னாத னார்பொடிப
டுத்து நீறணியி னாமு ரைத்தெனவள் பான்மையே. ()

எல்லாநன்மைக்கும் தேவியே காரணமெனல்.

அறிவி லர்க்கிதய திமிர மீருமள வற்ற வாதவர
ளப்பிலா, வெறிக திர்ப்ரபைகு ழைத்தி ழைத்தனைய
தீவி யாமனைநி னைப்பிலார், செறிம திக்கிணரி னொழுகு
தேனருவி தெறுக லிக்கருண்ம ணிக்குழாம், பிறவி

---

(க) நவம் - நவவியூகம். அவை : காலவியூகம், குலவியூகம், நாமவியூகம், ஞானவியூகம், சித்தவியூகம், நாதவியூகம், விந்துவியூகம், கலாவியூகம், சிவவியூகமாம். இவற்றுள், நிமிடமுதல் கற்பமளவும் காலவியூகமாதலால், சூரியசந்திராதிகளெல்லாம் அடங்கின. இவ்வாறு நவவியூகங்களுள்ளும் உலகமெல்லாம் அடங்கும். வியூகம் - கூட்டம்.

(உ) இயற்று - தொழின்முயற்சி. புவனமடைய - புவனமுற்றும். அனந்தன் திருமாலின் கூறென்பது புராணசித்தம்; இவ்வனந்தாவதாரராகிய பலராமரைத் திருமாலின் தசாவதாரமூர்த்திகளு ளொருவராக வைத்தெண்ணுவதும் இதனை வலியுறுத்தும். உரைத்து என்னென்பது - உரைத்தலால் யாது அடங்கிற்றும் என்பதுபட நின்றது.

(ங) அறிவிலர் இதயதிமிரத்திற்குத் தீவியாயும், நினைப்பிலார் மதிக்குத் தேனருவியாயும், கலிக்குச் சிந்தாமணிக்குழாமாயும்,

மைக்கடல்வி ழாதெ டுப்பதொரு பெருவ ராகவெண் ம ருப்பரோ. (௩)

தேவிபாதமே யாவையுங் கொடுக்குமெனல்.

தேவெ னப்புகழ வதினி மிர்ந்துநிகர் செப்பு வாரபய வரதமாம், பாவ கத்தபிந யத்தொ டுற்றகை பரப்பி யென்பய மொறுக்குமே, யாவ ருக்குமஃ தரிது நின்பதமி ரப்ப யாவையு மளிக்குமான், மூவ ருக்குமொரு தாவ ரப்பொருளென் மூல மேதழையு ஞாலமே. (௪)

தேவி யருளின் செய்கை.

தொடுக ரச்சிலைதொ டப்பொ ருமலர்சு ருப்பு நா ணிடுவ தைந்துகோ, லடுப டைத்தலைவ னர்வ சந்த மலை தென்ற றேருருவ மருவமா, முடுகு கொற்றமத

---

பிறவிக்கடலினெடுப்பதற்கு வராகமருப்பாயும் யாமளை இருக்கின்றாளென்பது. தீவி - தீபி; தீபமானவள்.

(௪) ஒருவர் தம்மைத் தேவெனப்புகழ அதனாலிறுமாந்து தாமும் நினக்கு நிகரென்பவர் அபயவரதமாகக் கைபரப்பியென்பயன்? அக்கை பயத்தையகற்றுமோ? அகற்றுவதுனக்கே யெளிது; நின்பதமே வரமளிக்கவும் வல்லது; என்றபடி. அபயம்-பயத்தையகற்றுவது. வரதம் - வரத்தைக் கொடுப்பது. பாவகம்-உள்ளக்குறிப்பு. அபிநயம் - அதனை வெளிப்படுத்துவது. மூவருக்குந் தாவரப்பொருளென் மூலந்தழையும் ஞாலம் - மும்மூர்த்திகளும் உற்பவித்தற்குக் காரணமாகிய முக்குணங்களென்னப்பட்ட வேர்வளரும் பூமி. "தாவரப்பொருளின் மூலமே" என்பது பாடமேல் உற்பவிக்குங்காரணப் பொருளினுடைய வேரானவளே! என்க.

(ரு) மன்மதனுக்குரிய மூவகை வில்லினுள் யாவர்மீதும் அலர் தொடுப்பது மலர்வில்லே என்பார் "தொடுகரச்சிலை தொடப்

ஞெருவ னிப்புவன முற்றும் வெற்றிகொள முடிவிலா, நெடுமே லர்க்கணருள் சிறித ளித்தனைகொ னீலி யே கரக பாலியே. (ரு)

தேவியை வந்தித்தோர் பெறுபயன்.

மாயன் வணங்கியுன் மால்வடி வங்கொள வாடுமே ரன்றுயர் போதாதோ, தூயம தன்றெழு வாண்வடி வம்புணர் தோகைகண் வண்டயி றேனேபோன், மே யவ ழுங்குமு ரூபம தென்சொல மேலிது கண்டவர் வாழ்வாரோ, நீயதி ரஞ்சகி மோகன வஞ்சகி நீசெய்வ தொன்றல மாதாவே. (சு)

தேவியை யென்முன் வந்தருளெனல்.

மேகலை பொங்கம தாசல கும்பமெ னுமுலை கண்டி டை சோராநீர், மாகவ ளங்கெழு நாணிறை யம்புலி

---

பொருமலர்" என்றார். மூவகை வில்லுண்டென்பதனைக் "கயக்க ணின்ற பூவின்மிக்க காமகாண்டங் கன்னல்வில் - லியக்கமான பாரவில்" என்னும் கந்தபுராணம் காமதகன படலச்செய்யு ளானறிக. நீலி - நீலநிறத்தவள்.

(சு) மால்வடிவம் - மோகினிவடிவம். பூவில்லும், பூவம்பும், சைத்தியம் சௌலப்பியம் மாந்தியம் என்னும் முக்குணமுடை ய தென்றற்றேரும், அமுதகிரண முடைய திங்கட்குடையும், பூஞ்சோலைப் பாசறையும் உடையனுதலால் "தூயமதன்" என் றார். சைத்தியம் - குளிர்ச்சி. சௌலப்பியம் - சுகந்தம். மாந் தியம் - மந்தகதி. ஆண்வடிவரூபம் - ஆண்வடிவத்தினழகு. தோகையென்றது - இரதியை. மேய - உண்ணும்படி. இது வென்றது - மேற்கூறிய இருவகை வடிவையும். அதிரஞ்சகி - மிகவும் பிரியம் பண்ணுகிறவள்.

(எ) அரனியல்பினு மிக்க ஒளியையுடைய மாதே! அடிமைத் தொழிலனென்னு முரிமையால், என்னுடைய தாள்களை நீ வரு

வாண்முக மம்புவி லேடார்போ, தேகநெ டுங்கழை பாசமொ டங்குச மேர்பெற வந்தருள் காபாலி, நீகம லந்திகழ் தாள்வரு டென்றர னீர்மையின் விஞ்சிய கோமாதே. (எ)

தேவி யோகநித்திரைகொள்ளுந் தானம்.

ஆரமு தின்கடல் வேலிசெ ழுந்தரு வாய்மணி பம்பிய தீவூடே, பாரக டம்படர் கானில ருங்கொடை பாய்மணி மண்டப விடேடே, கோரசி வன்பர மேசனு மஞ்சமொர் கூர்பரி யங்கமெ னுமேலே, சிரட ரும்பர ஞானமு றுங்களி தேவர ருந்துவர் பூமாதே. (அ)

குண்டலிசத்தி தன்னிடம்விட்டுச் செல்லுமாறு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மூலமணி பூரகத்தோ டிலிங்க மார்பு முதுகளம் விற் புருவநடு மொழிவ தாறு, ஞாலமுமென் புனலு மனற் பிழம்புங் காலு நாதமுறு பெருவெளியு மன

---

டுவோயாக வென்று (எனக்கும் பணித்துக்கொண்டு) மேகலை யசைய இடைசோர சந்திர முகத்தோடு மலரம்பும் கழைவில் லும் பாசமும் அங்குசமும் விளங்க, என்முன்வந்தருள எனக் கொள்க. பொங்குதல் - ஈண்டசைதல். சோரா எச்சத்திரிபு. மாகம் நீர்வளங்கெழுநாள் - கார்காலம். அம்பு போது, வில் கழை, எனக்கூட்டுக. கோ - ஒளி.

(அ) தரு - பஞ்சதருக்கள். கொடைமணி - சிந்தாமணி. உருத் திரனை மஞ்சமாகவும், மகேச்சுரனைப் பரியங்கமாகவுங்கொள்க. பரியங்கம் - சயனம். ஞானமுறுங்களி - தேவியின் ஞானனந்த நித்திரையின் மகிழ்ச்சி. தேவர் - ஈண்டு அரியதவத்தர்.

(கூ) குதத்தானமாகிய மூலாதாரமும், இலிங்கத்தானமாகிய சுவாதிஷ்டானமும், நாபித்தானமாகிய மணிபூரகமும், மார்புத் தானமாகிய அநாகதமும், கண்டத்தானமாகிய விசுத்தியும், புரு

மு மாக, மேலணுகிக் குளபதத்தைப் பின்னிட் டப்
பான் மென்கமலத் தாயிரந்தோட் டருண பீடத்,
தாலவிடம் பருகியதன் மகிழ்ந ரோடு மானந்த முறும்
பொருளை யறிய லாமே. (கூ)

தண்டலிசத்தி தன்னிடத்தை மீண்டடையுமாறு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாளிணைக் கமல மூறித் தருமமிழ் துடல மூழ்க
மீளவப் பதங்கள் யாவும் விட்டுமுற் பழைய மூலம்
வாளர வென்ன வாகம் வளைத்துயர் பணத்தி னோடு
நாளுமைக் கயற்கண் டுஞ்சு ஞானவா னந்த மின்னே.

தேவி யிருக்குஞ் சக்கரம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவகோண முற்பகர்வ தொருநாலு சத்திநெறி
செறிகோண மத்தொடொரு மருவுகோ, ணவகோண

---

வ நடுத்தானமாகிய ஆக்கினேயுமென்னும் ஆறும், ஞாலமுதலிய ஆறுமாக இருக்கவென இயைக்க. குளபதம் - அருதாரம். ஆனந்தமுறும் பொருளென்றது - சுழுமுனாடியினூடே அரவவடிவாய்நிலவி, உடலைவளைத்து, மூலாதாரத்திற் படத்தைவைத்துக்கொண்டு, யோகநித்திரை செய்யுங் குண்டலி சத்தியை. அச்சத்தி இவ்வாறுசென்று சதாசிவமூர்த்தியோடு கூடுவதை யோகத்தினுலறிவதே வீடென்பது கருத்து.

(௧0) ஞானவானந்தமின் - ஞானமகிழ்ச்சியையுடைய மின்போன்ற குண்டலிசத்தி. இச்சத்தி அரவுருவை நிகர்க்கினும் அச்சத்திக்குரிய மகளே வடிவையே நோக்கித் தாளிணைக் கமல மென்றும், கயற்கண்ணென்றுங் கூறினர். மின்னேயென்பதனை விளியாக்கித் துஞ்சுமென்பதனை முற்றாக்கினும் பொருந்தும்.

(௧௧) சிவகோணம் நான்கும் சத்திகோணமைந்துமாகிய நவகோணத்தினுள்ளும் பொருந்தியது நாற்பத்து முக்கோணம்.

முட்படுவ தெழுமூவி ரட்டியொரு நவில்கோண முற் றதுவும் வலயமா, யிவராநி ரைத்ததள மிருநாலு மெட் டிணையு மெழிலாய வட்டமொடு சதுரமா, யுவமான மற்றதனி தனிமூவ கைக்கணுமெ னுமைபாத முற்ற சிறு வரைகளே. (கக)

தேவியினது திருவழகை வியத்தல்.

கலிநிலைத்துறை.

ஆதி சுந்தரி வடிவினை யயன்முதற் புலவோ, ரேது கண்டள விடுவது தமையிக ழிமையோர், மாத ரிங் கிவண் மகிழ்நரொ டுறைகுவ மெனினோர், பேதை கொங்கைகள் பெறுகுவ மெனமறு குவரால். (கஉ)

தேவியினது கருணையை வியத்தல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறக்கிழவன் மனிதன்விர கில்லாக் கொச்சை யழகிருந்த வூரிலிருந் தறியா னேனு, முறக்கருணை கொழிக்குமுன தமுத வாரி யூடணுகி னவனையர மகளி ரெல்லா, நறைக்குழலுஞ் சரிந்திடவுத் தரியஞ்

இங்ஙனம் நாற்பத்து முக்கோணமாக வுற்றதுவும், அதற்குமேல் வட்டமாக எழுதிநிரைத்த எட்டிதழும், அதற்குமேல் வட்டமாக எழுதிநிரைத்த பதினறிதழும், அதற்குமேல் மூன்றுவட்டத்தினிதழும், அதற்குமேல் மூன்று சதுரத்தினிடமுமாகிய இவைகள் என்னுடைய உமைபாதநிலவிய இரேகைகளாம். எ-று. கோண் கடைக்குறை விகாரம். மூவகைக்கண் - மூவகையிடம்.

(கஉ) சுந்தரிவடிவினை நோக்கி அழகின்றிய தம்மையிகழும் இமையோர் மாதரென்க. சிவனோடுறைகுவது-சாயுச்சியம் பெறுவது. பெண்வடிவிற்குப் பெண்வடிவுடைய தெய்வமகளிரே ஆசைப்படுவரேல் அவ்வடிவழகை அளவிடுவ தெங்ஙனம்? எ-று.

சோர நாணழிய வளைசிதற வுடுத்த வாடை, புறத்து விழ மயலொடும்பின் றொடர்வ ரென்றூற் பொற் கொடிநின் புதுமையெவர் புகழ வல்லார். (௧௩)

தேவிபாதந் சடாதாரகிரணங்களின்மே லிருக்குமெனல்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பணைபார் புனற்கனலி வளிவான் மனத்திலறு பதிறு லொழித்ததுமுன் னடைவிலே, யிணைநாலொ ழித்ததிரு கதிரேற வுற்றதுமூ விணைபோய தெட்டி னொடு கதிர்கணு, லணையாநி ரைத்ததறு கதிர்நால

---

(௧௩) அறக்கிழவன் - மிகவுமுதியோன். விரகிலாக்கொச்சை யென்பது - ஈண்டு காமவுணர்வில்லாத மெலிவினன் என்னும் பொருட்டு.

(௧௪) பணைத்தபாரும் புனலும்நெருப்பும் காற்றும் ஆகாயமும் மனமுமாகிய மூலாதாரமுதலிய இவ்வாறுதாரங்களினும், முறை யே, ஐம்பத்தாறும், ஐம்பத்திரண்டும், அறுபத்திரண்டும், ஐம் பத்து நான்கும், எழுபத்திரண்டும், அறுபத்து நான்குமாகிய ஆறுவகை யளவையினுரைத்த முந்நூற் றறுபது கிரணங்களின் மேலே உமைபாதமிருக்கும் எ-று. முன்னடைவிலே என்பதற் கு முன்னுரைத்த கணக்கின்படியே என்க. அறுபதென்னுந்தொ கையிற் குறைத்துங் கூட்டியு முரைத்தமையறிந்து ஆருதாரங் களினுங் கொள்க. இனி, அக்கினி தன்கிரணம் நூற்றெட்டுள் மூலாதாரத்தில் ஐம்பத்தாறும், மணிபூரகத்தில் ஐம்பத்திரண் டும் நிலவத் தான் சுவாதிஷ்டானத்தி லிருத்தலின், மூலாதார மும் சுவாதிஷ்டானமும் அக்கினிகண்டமென்றும் உருத்திரக்கிர ந்தியென்றும் பெயர்பெறும். சூரியன் தன்கிரணம் நூற்றுப்பதி னாறனுள் சுவாதிஷ்டானத்தில் அறுபத்திரண்டும் அநாகதத்தில் ஐம்பத்துநான்கும்நிலவத் தான் அநாகதத்திலிருத்தலின், மணி பூரகமும் அநாகதமும் சூரியகண்டமென்றும் விஷ்ணுகிரந்தி யென்றும் பெயர்பெறும். சந்திரன் தன்கிரணம் நூற்றுமுப்

டுத்ததத னளவாயி லக்கமறு வகையினு, லுணரா வுரைத்தகதிர் களின்மே லிருக்குமென துமைபாத செக்கர்விரி கமலமே. (கச)

மதுரகவிபாட வேண்டினேர் தியானிக்குமியல்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உனதுசரற் காலமதி யனைய மெய்யு முடல்கு ழைத்த பிறைச்சடையுங் கரங்க ணன்கு, மனவரத முறுமபய வரத ஞான வருட்பளிங்கு வடமொடுபுத் தகமு மாக, நினைகிலர்முன் வழுத்திலர்பின் வணங் கா ரெங்ஙன் னிறைத்தபசுந் தேனுமடு பாலுந் தூய, கனியுமென மதுரம்விளைந் தொழுகு பாடற் கவிதை பொழி வதுகயிலைக் கடவுள் வாழ்வே. (கரு)

இன்பக்கவிதை பாடவேண்டினேர் தியானிக்குமுறை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாரின்ப முலைமலை மடந்தைகவி நாவலர் மனக்க மல வனமலரநீ, டேரின்ப விளவெயி றழைக்கும்

பத்தாறனுள் விசுத்தியில் எழுபத்திரண்டும் ஆக்கினையில் அறு பத்துநான்கும் நிலவத்தான் ஆக்கினையிலிருத்தலின், விசுத்தியும் ஆக்கினையும் சந்திரகண்டமென்றும் பிரமக்கிரந்தி யென்றும் பெயர்பெறும். ஆயினும் அக்கினியின் கிரணங்கள் மணிபூரகத் திலும், சூரியகிரணங்கள் சுவாதிஷ்டானத்திலுமாகத் தமக் குரிய இடமாறி நிலவலிற்போலும், (க) வது செய்யுளினும் மூலாதாரத்தின்பின் மணிபூரகத்தைக் கூறியதூஉமென்க. இம் முச்சுடரின் கிரணங்கள் ஆறுதாரத்தும் அடைந்திருத்தலின் அதனதன் கிரணமெனலாயின.

(சரு) குழைத்தல் - வளைதல்.

(கசு) கவிநாவலர் மனக்கமலவனம் அலரத் தழைக்கும் பிர பையையுடைய மடந்தையினது செய்யசிறத்தைத் தியானிப்

ப்ர பைச்செய்ய செவ்விநிற முணருமுரவோர், தா
ரின்ப நறவொழுகு சுருளோதி யிருள்விரவு தவள
நிற வாணிகலைதேர், பேரின்ப மதுரவலை யெறியமுத
கவிதைகொடு பேருலகை மகிழ்விப்பரே. (கசு)

காவியஞ் செய்யவேண்டினோர் தியானிக்குமியல்பு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இந்துசிலை யைப்பிளந் துண்ணிறம் வகுத்தனைய
வெழில்வசனி யாதி மடவா, ரந்தவிணை நால்வர்புடை
சூழமலை மங்கைதன தருணவடி வுணர வறிவோர்,
கொந்தவிழ விரிதவள மலர்மங்கை முககமல கோல
பரி மளக விதையாற், செந்தமிழின் வடகலையின்
முதுமொழிக் காவியத் தெளிபாடல் செய்யு மவரே.

மகளிர் வசியம்வேண்டினோர் தியானிக்குமியல்பு.

உனதுநிற மெனுமிளைய கதிரிரவி வெயின்முழுகு
முலகடைய வெனநி னைகுவோர், வினைகெழுமு
கொலைமறலி யனையவிழி யுருவசிமுன் விரவுமர மக

---

போர், வாணியும் கலைகளைக்கொண்டு தேரத்தக்க கவிதைகளால் உலகைமகிழ்விப்பவராவர். எ-று.

(கஎ) இந்துசிலையின் நிறத்தராகிய வசனியாதிமடவார்:—வசணி, காமேசுவரி, மோகினி, விமலை, அருணை, சயினி, சர்வேசுவரி, கௌளினி, என்பர். இவர் தேவியைப்போல நான்குகைகளினும் அபயமும் வரதமும் படிகமாலையும் புத்தகமும் உடையராய் அத்தேவியின் முக்கோணத்தைச் சூழ்ந்த எண்கோணங்களினும் இருப்பவராகத் தியானிக்கத்தக்கவர். அருணவடிவைத் தியானிப்போர் நாமகளும் தன்னுவினுல் பாராட்டத்தக்க கவிதையால் காவியம் செய்யுமவ ராவரென்பது.

(கஅ) மயிலே! என்று கவிமுதலிய பொருள்கள் ஒன்றிலொன்று கலந்து நிற்குமாறுபோல், நினைவு பரவசப்பட்டு உருகும்

ளிர் விழைவோ, ரனவரத மெனதமுது பொழிகவியு முனதருளு மெனதுடலு முயிரு முயிர்சூழ், மன முமதி லுணர்வும்வரு களியுமென நினைவுருக மலைய ரைய னுதவு மயிலே. (கஅ)

மோகிப்பிக்க வேண்டினோர் தியானிக்குமியல்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதி விந்துவை முகமென விணைமுலை கீழி ரண்ட தன் வடிவென வருகுதாழ், கோத றுஞ்சுட ரெழ வழ கொழுகுத்ரி கோண மொன்றென வுனதெழி லிரதிதோய், காத லன்கலை தமதிட நினைபவர் காணு மங்கையர் கலைகொள லரியதோ, வோதி லிங்கிரு சுடர்முலை யனையவு லோக மங்கையை மயல்செய்வர் கமலையே. (கசு)

விஷமுஞ்சுரமுந் தீர்க்கவேண்டினோர் தியானிக்குமியல்பு.

ஆட லம்பிகை யிமகர சிலைவடி வாளு நெஞ்சினுள் வழிவுறு கிரணமே, லோடி யெங்கணு முடல்பெரு

---

படி இங்ஙனம் நினைவோர் தெய்வமகளிராலும் விரும்பப்படு வார் என்றபடி. நிறமென்னும் வெயிலில் முழுகுதலாவது - உள் ளும் புறம்பும் அக்காந்தியினால் நிரம்பப்பட்டிருத்தல்.

(கசு) ஓர் பெண்ணின்முகத்தை ஆதிவிந்துவென்றும், தன ங்களை அவ்விந்துவின் இருவடிவென்றும், அல்குலைத் திரிகோ ணமென்றும், மன்மதன் கலையோடு தம்மிடத்திலே நினைபவர், இருசுடர்களையும் இருமுலைகளாகப்படைத்த உலோக மங்கை ை 'யும் மயல்செய்வர் என்க. மன்மதன்கலை காமவடிவாயிருக் கின்ற எழுத்து. அது கிலீங்காரம். அதனை முக்கோணத்தி னடுவே அருணவடிவாகத் தியானிக்கவேண்டும். மேற்கூறிய மூவகையிடத்தும் தியானிக்கவென்பதும் நூற்றுணிபு.

கமிழ்தென வூடெ ழும்பரவை தமதிட முணர்கு வோர், நாட வுங்கொடு விடமொரு கலுழனே நாடும் வெங்கொலை யரவென முறியுமேன், மூட ருஞ்சுரம் விழிபொழி யமுதினின் மூழ்க வென்பொடு மழலு டல் குளிருமே. (உ0)

சமாதியு நிட்டையு முடையோர் தரிசித்து மியல்பு.

ஆன மின்கொடி போலுமென் முண்டக மாறின் மண்டல மூவகை யின்கணோர், பானு வம்புலி தீயி னிறங்கிளர் பான்மை கொண்டித மாயிர கஞ்சநீள், கானி லுன்களி ஞான முறுங்கலை காழ்ம லங்களின் மூவகை பொன்றியே, போன சிந்தையின் மாயை யொழிந்தவர் போத மின்புறு மாதியொ டந்தமே. ()

(உ0) அம்பிகையினது சந்திரகாந்தச்சிலை போலும் வடிவை யும், அதில்வழியுங் கிரணவழியேயோடி உடலினின்று எங்கும் பெருகும் அமுதமென உள்ளிருந் தியங்கும் ஒளியையும், தமதி டமாகத் தாம் ஆளும் நெஞ்சினுள்ளே நினைகுவோர் நோக்கக் கொடுவிடமுறியும்; உடலின்மேற்கவிந்த அருஞ்சுரமும் குளி ரும் என்பது. அருஞ்சுரம் - விடுதற்கரிய சுரம்.

(உக) வேதத்தின் ஆதியந்தமானவளே! மெல்லிய ஆதாரகம லங்கள் ஆறினையுமுடைய மூவகைமண்டலத்தினும் தீ பானு அம்புலியின் நிறம்கிளர்கின்ற தக்கமின்கொடிபோலும் பான் மைகொண்டு அவற்றின்மேலுள்ள ஆயிரவிதழ்க் கமலத்திற் களி யுறுகின்ற உன்னுடைய ஞானகலையினால் மலங்களின் மூவகை யும் பொன்றி மனத்தொடு மாயையும் ஒழிந்தவரறிவு பேரின் பத்தை யடையும். எ-று. மண்டலமூவகையினும் முறையே தீ பானு அம்புலி என மாற்றுக. பான்மை கொண்டு கானிற் களியுறும் உன் ஞானகலையென இயையும். களியுறல் - சதாசி மூர்த்தியோடு கூடிமகிழ்வுற்றிருத்தல். போதம் - அறிவு.

தேவி விரைந்து வரங்கொடுத்தல்.

பேரு றுங்கயி லாசன்ம கன்பெறு பேர னன்புறு பேரனெ னுஞ்சொலால், வார மன்பொடு பார்வை வழங்கென வாய்தி றந்திட வோடிவ ழங்கினுய், வே ரி முண்டகன் மான்மகு டங்களின் வீச ரும்ப்ரபை திபமு வந்ததாள், சேரு நன்பெரு வாழ்வும்வ ழங் குவை தேட ருஞ்சிவ மாயம தங்கியே. (உஉ)

அர்த்தபாகமா யிராத தேவியைச் சிறப்பித்தல்.

ஆதி சங்கரர் பாதியு டம்பினி தாளு மம்பிகை பா தியும் விஞ்சுமோ, நீதி யன்றென நாயகர் பங்கையு நீக வர்ந்தனே யாலவ ரெங்குளார், சோதி செங்கதிர் மேனிநி றைந்தது தூய கண்களு மூவகை கொங்கை

---

(உஉ) மதங்கியே! நினது கணவராகிய கைலாசபதியின் பெயரைப் பெறும் கைலாசனென்னும் ஒருவனுடைய பேர னது பேரனென்று என்னே யாவரும் வழங்குதலால், உனக்கும் அடிமையாதல் குறித்து அருள்கவென்று சொல்லுதற்கு வாய் திறந்திடுமளவிலேயே நின்னேப்பாடும் ஆற்றலாதிய அளித்தனே; அச்சொல் முழுதங்கூறின் நின்முள்சேரும் வாழ்வும் நல்குவை என்பது. "கைலாசன் மகன்பெறுபேரனன்புறுபேரன்" என் றது, யான் பரம்பரைத் தொண்டனென்பது குறிப்பித்தபடி. பேரன் - பாட்டனுடைய பேருக்குரியவன்.

(உங) அம்பிகையே! சிவபெருமானிடத்துள்ள அருணவண் ணமும் முக்கண்களும் முடியி லிளம்பிறையும் நீயுமுடையளாயி ருத்தலின், அவர்பால் நினக்குரிய பங்கையேயன்றி நாயகர் பங் கையும் நீகவர்ந்ததன்றி, நின்பாலுள்ளஇவற்றை அவர்கவர்ந்தன ரன்றென்பார் கொங்கையிரண்டென அவற்றையும் உடன்கூறி ஞர். யாவும் நம்முளொடுக்கியனவாக இவ்வர்த்தபாக மாத்தி ரம் எஞ்சியிருப்பது முறை யன்றெனக் கவர்ந்தாய்போலும்

யோ, வீதி ரண்டுடல் கூனுமி ளம்பிறை யேர்பொ
ழிந்தது நீண்முடி யெங்குமே. (௨௩)

தேவி புருவத்தால் ஏவுதலை வியத்தல்.

ஆதி முண்டகன் மால்சிவ னண்டர்ம கேச னந்த
ச தாசிவ னைந்துபேர், மேத குந்தொழில் போலவ
னைந்தருள் வீறு மங்கத னூறலு முண்டெனா, யாது
மின்றியு மேனியொ டெங்கணு மாயை தந்தது
ஞானமி ரங்குமோர், நீதி யுந்திரு வேபுரு வங்கொடு
நீசொ லிங்கித வேவல்பு ரிந்ததே. (௨௪)

தேவி பாத பூசைமகிமை.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மூவ ருக்குமு தற்பி றப்புநின் முக்கு ணக்கட லெ
ன்றுமுன், சேவ டிக்கணி ருப்பர் சென்னிகு வித்த
செங்கைபி ரிக்கிலார், பூவெ டுத்தவர் சென்னி வைத்

---

என்பது கருத்து. ஆலும் ஓவும் அதனையடுத்த ஈதும் இடைச்சொற்கள்.

(௨௪) முண்டகனுதியரால் உலகங்களை வனைவதும், உண்டென அவற்றை நிலைபெறவித்தலும், யாதுமில்லாதாக்கலும், சீவான்மா பரமான்மாக்களின் சொரூபங்களோடு மற்றுந்தோன்றுதபடி மயக்கலும், அவற்றினியல்பறியுமாறு ஞானமளித்தலுமாகிய ஐந்தொழிலும் தேவியின் புருவநெறிப்பால் நிகழுமாறுணர்த்தியபடி. ஊறல் - உறுதல். இன்றி - இன்மைப்பொருட்டு; நன்றி யென்பதுபோல. மாயை - மறைவு. இங்கிதம் - குறிப்பானிகழும் உறுப்பின்றெழில்.

(௨௫) பிறப்பு - பிறத்தற்குக்காரணம். தேவி மஞ்சத்தினமருங்கால் எதிரே மும்மூர்த்திவடிவாகிய முக்காற் பீடத்துத் திருவடியிருத்துவதியல்பென்பதும், அம்மூவர்முடியிற் சாத்துமலர்

திடு போத முற்றவ ரம்மைநின், காவ லர்ப்பொதி தா
ளில் வைக்கவு மூவர் சென்னிக ளிக்குமே. (உரு)

தேவி மங்கலநாண் சிறப்பு.

வேத ரஞ்சகன் மால்பு ரந்தரன் வேக சண்டகு பே
ரனோ, டாதி யெண்டிசை பாலர் பொன்றவு மாதி யங்
தமி லாததோர், நாதர் பொன்றில ரேதுன் மங்கல
நாணு றுந்திற மாதலா, னீத ழைந்தது யோக மம்பி
கை நீலி யென்பது பாவமே. (உசு)

என்னை யளித்தல்வேண்டு மெனல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மொழிவ துன்செப முத்திரை பாணியின் முயல்
வ தெங்குந டப்பன கோயில்சூழ், தொழில ருந்துவ
முற்றுமு னுகுதி துயில்வ ணங்கல்க ளிப்பன யாவுநீ,
யொழிவ றுங்களி யென்செயல் யாவையு முனது
நன்சப ரிச்செய லாகவே, யழிவ றும்பதம் வைத்த
ருள் பேரொளி யளிவி ளைந்துக ளிப்பெழு நாதமே.()

---

களைத் தேவிதிருவடியிற்சாத்தின் அவராற் பெறும்பேறனைத்து
ம் எளிதெய்து மென்பதும் விளக்கியவாறு. கா-கற்பகச்சோலை.

(உசு) வேதரஞ்சகன் - வேதப்பிரியன். நாதர் பொன்றுமைக்
குக் காரணம் உன் மங்கலநாண் உறப்பெறுந் திறமேயாதலால்,
நீ வதுவைசெய்யப் பெற்றமையே அவர்க்கு யோகம் என்றபடி.
நீலி - நீலநிறத்தவ ளெனவும், மஙளத்தில் வைர முடையவளெ
னவும் பொருள்படுதலின் நீலி என்பது பாவமே யென்றார்.

(உஎ) மொழிவவெல்லாம் செபமாகவும், கைச்செயலெல்லாம்
உன்னுடைய முத்திரையாகவும், இங்ஙனம் கைக்கொண்டருள்க
என்க. சபரி-பூசை. வைத்தருள் - முற்று. முத்திரையாவன:—
சங்க்ஷோபம் திராவணம் வசியம் உன்மாதம் மகாங்குசம் கேசரி
பீசம் யோனி திரிகண்டம் என இவை.

உ

### தேவியினது தோட்டின் சிறப்பு.

கலிநிலைத்துறை.

பிரம னிந்திரன் முற்பிற தேவர்க ளுணெலா,
நரைபெ ருந்திரை யற்றநல் லாரமு தேகொலா, மொ
ருவர் தங்கிலர் நின்சிவ னூண்விடம் வாழ்வன்மா,
திருபெ ருங்குழை யிட்டபொன் னோலையின் வாசி
யே. (உஅ)

### ஏவலாளர் மங்கலமொழி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முதுமறைசொ லிளவனிதை யயனொடரி குலிச
னுனை முறைபணியு நெறியி னிடையே, பதறியுன
தருகுவரு மரனையெதிர் கொளவுனது பரிசனமு
னடிவ ளமையா, லிதுபிரமன் மகுடமரி மகுடமிது
குலிசன்முடி யிதுகடின மிடறு மிருதாள், கதியமர
வமரவழி விலகிவர வரவெமது கடவுளெனு மொழித
ழைகவே. (உகூ)

### தேவிவித்தை வந்தவாறு.

பசுபதித னீதிகொண் டறுபத்து நாலுபல கலை
ஞான முங்க ருணையால், வசிவற நெடும்புவன மா
யையின் மயக்கியதன் வழிவரு பெரும்ப யனெலா,

(உஅ) மாதே! நின்கணவராகிய சங்கரர் வாழ்தற்குக்கார
ணம் நின்பொன்னோலையின் நன்மையே எ-று.

(உகூ) வனிதையே! அயனுதியர்கிடக்கும் நெறியி னிடைவ
ரும் அரனை நீ பதறி யெதிர்கொள்ள நின்னடியின் மென்மை
யறிந்த பரிசனம் முடியிடறுதபடி விரைந்துசெல்லும் வேகந்
தணித்தருள்கவென்னும் மொழிதழைக. எ-று.

(௩0) பசுபதி மயக்கி விளைத்ததும், அளித்ததும், நின்னை
மனைவியாகப்பெற்ற உரிமையாலல்லவோ? எனவியையும். நீதி-

மிசைபெற விளைத்ததுவும் பின்னுமுன தேவலா வி
ணையிலுன தாகம மெலாம், விசைபெற விளைத்தெ
வையு மிதுதர வளித்ததுவும் விமலையுன துரிமை
யலவோ. (கூo)

தேவியினது மூலமந்திரம்.

அரியதா குஞ்சிவஞ் சத்திமத னவனிபின் பாதித்
தன் மதிம தனவேள், பெருகுவா னிந்திரன் பின்பு
பரை மதனன்மால் பேசின்முக் கண்ட மடைவே,
யுரியதா மந்தத்தின் மாயைமும் முறையமைத் தறு

---

ஈண்டு அறிவு. அறுபத்துநான்கு கலைவிகற்பம் அகராதியிற் காண்க. வசிவு - வடு. மயக்கல் - அக்கலை ஞானங்களைக் கருணையால் மாயையைக்கொண்டு புவனங்களில் விரவச் செய்தல். எவையுமென்பது அக்கலைப் பயன்களையன்றி யேனைப்பயன்களையும் சுட்டிநின்றது. ஆகமம் - ஸ்ரீவித்தை. அது மந்திரமும் சக்கரமுமாம். மந்திரம் பிற்கவியினும், சக்கரம் "சிவகோணம்" என்னும் முற்சென்ற கவியினுங் காண்க.

(கூக) எழுத்தென்றது அவ்வத்தேவதைகட்குரிய பீஜாக்ஷரங்களை. ஹம் - சிவபீசமும், ஹ்ரீம் - சத்திபீசமும், க்லீம் - மன்மத பீசமும், மறு - பூமிபீசமும், ஸம் - சூரியபீசமும், ஓம் சந்திரபீசமும், ஆம் - ஆகாசபீசமும், இம் - இந்திரபீசமும், ஸௌம் - பராசத்திபீசமும், நம் - விஷ்ணு பீசமும், ஹ்ரீம் - மாயைபீசமுமாம். இவற்றுள் சிவம் சத்தி மன்மதன் பூமிக்குரிய நான்கும் முதற்கண்டம், சந்திரகண்டமுமாம். ஆதித்தன் மதி மதன் வான் இந்திரனுக்குரிய ஐந்தும் இடைக்கண்டம், அக்கினிகண்டமுமாம். பராசத்தி மன்மதன் திருமாலுக்குரியமூன்றும் கடைக்கண்டம், சூரியகண்டமுமாம். ஈண்டுக்கூறிய பன்னிரெழுத்தினமைந்த முக்கண்டத்தினும் தனித்தனி இறுதியில் மாயையெழுத்தைக்

மெழுத் தடைய வுணர்வாற், றெரியினு மத்தினொடு
முனதுறுப் பாமென்று செப்புநான் மறைகளுமை
யே. (௩க)

அம்மந்திரத்துட னெழுத்துக்கள் கூட்டிச் செபிக்குமுறைமை.

மோக போக விழைவி னுருன் மூல வித்தை தன்
னின்முன், னுக மாரன் யோனி பொன்ன ணங்க
மைத்து நெய்யினல், யோக மார்சி வத்த முற்கு ளோ
ம முற்று விமலையே, தியாக மாம ணிக்கொ டக்க
வலய முட்செ விப்பரே. (௩உ)

---

கூட்டித் தேருங்கால் தேவிக்குரிய பஞ்சதசாக்ஷரி யென்னும்
நாமமந்திரமாய் அத்தேவியின் அங்கமுமா யிருக்குமென்று நான்
கு வேதங்களும் செப்புகின்றன. எ - று. முக்கண்டமென்பது
புலப்படப் பின்பென்னுஞ்சொல் இருமுறை இடையிட்டார்.
சத்தியின் எழுத்து முதலியன பின்னும் வருதல் பயன்கருதிய
முறைமைபற்றி. இம்முக்கண்டம், முச்சுடரும் முச்சத்தியும்
மூன்றவத்தையும் முக்குணமுமாயிருக்கும்.

(௩உ) மோகத்தைச்செய்யும் போகம் விரும்பினோர் மேற்கூ
றிய அம்மூலமந்திரத்தினுதியில் மன்மதன் சத்தி இலக்குமிக்கு
ரிய மூவெழுத்தையும் முறையே யமைத்துப் பதினெட்டெழுத்
தானியன்ற இம்மந்திரத்தைச் செவிப்பர். எ-று. தழற்குயோ
கம் சமிதை முதலியவற்றோடு கூடுதல். தியாகமாமணி-சிந்தா
மணி. செபமாலை சிந்தாமணியெனவே நெய் காமதேனுவினெய்
யெனக் கொள்க. இவை கிடைக்கப்பெறுதார் தாமரைமணி
யும் பசுவினெய்யுங் கொள்வர். தியாகமாமணியக்கவலயங்கொடு
என இயையும். அக்கவலயம்-உருத்திராக்கவடம். அது ஈண்டுச்
செபமாலையென்னும் பொருட்டு. தாமரைமணி இச்சித்தவெல்
லாந்தருமென நூல்களியம்பலின் பொதுப்படத் தியாகமாமணி
யென்றுர் எனினுமமையும்.

சத்திவடிவுஞ் சிவன்வடிவும் ஒன்றேனல்.

இருசுடர் முலைத்துணைச் சிவன்வடிவு நீயதனே யா
னுநவ மாக நினேவே, னுருவுநிறை தன்னிலள வொத்
தபர மானந்த முடையபர னெடுப ரையுமாய்,
மருவுமினி தாமுங்கள் கூட்டமது சேடமு மறுத்த
தனே யுடைய துவுமா, யருகிலிரு வர்க்குமொரு
பொதுவாகி நிற்குங்கொ லழிவற்ற ஞான முதலே. ()

இது அதன்கருத்தை வேளிப்படுத்தல்.

மனமுநீ வெளியுநீ வளியுநீ கனலுநீ மறிபுனலு நீ
பு வியுநீ, நினேயினீ பரமற வளர்ந்தொளி பரந்துவிடி
னீயன்றி யொன்று முளதோ, வுனதுமா ஞானவா

---

(௩௩) சூரியசந்திரர்களாலாகிய இருதனங்களையுடைய நீயென
வே புவனமெல்லாம் சத்திரூபமெனவும், சிவன்வடிவுநீ அதனே
யானும் நவமாகநினேவேனெனவே மீண்டும் அப்புவன ரூபமெ
ல்லாம் சிவரூபமா மெனவும், ஆகவே சத்திரூபமே சிவரூபம் சிவ
ரூபமே சத்திரூபமெனவும், சொள்ளக்கிடந்தன. சத்தி சிவன்
வடிவென்னுங்கால் சத்தி சேடமாகவும், சிவன் சேடத்தையுடை
யனுகவும், சிவன் சத்திவடிவென்னுங்கால் சிவன் சேடமாகவும்
சத்தி சேடத்தையுடையவளாகவும், கூறப்படு மாதலால், இங்
ஙனங் கூறினர். நவம் - "சிவமெனும் பொருளும்" என்னும்
முதற்செய்யுளிற் கூறிய நவவியூகம். பரமானந்தத்தைப் பரை
க்குங் கூட்டுக. கொல் அசை. கூட்டம் இருவர்க்கும் பொது
வாகி நிற்குமென இயையும். மறுத்தல் - சேஷத்தைச் சேஷி
யாக்கல்.

(௩௪) நினையுங்கால் நீ மேலறவளர்ந்து ஒளியாக எங்கும்பர
ந்துவிடின் உன்னை ஒழிந்து வேறொரு பொருளில்லை. அங்ஙன
மாக ஒருத்தி தன்மக்களுக்குத்தாயுமாகித் தன்னை யீன்றாளுக்கு

னந்தவுரு வைப்புவன வுருவென வகுத்த ருளவோ, வனையுமாய் மகவுமா மாறுபோ னீசத்தி யருணவடி வாய தமையே. (௩௪)

ஆக்கினைச்சக்கரத்திலே தரிசித்துமியல்பு.

அருளுமுன தாக்கினைத் திகிரிக்கு ளுட்பட் டருக் கன்மதி யனைய வடிவாய்ப், பருவமுதிர் பரசின் மயத்தொடுறு பான்மையாம் பரமசிவ னைப்ப ணிகுவா, மொருபொழுதி லிப்பரம சிவனையெழு கதிர்ம திய வொளிகடந் தொளிரு மொருபாற், பெருகுபர மானந்த விழைவொளி நினைப்பதுகொல் பெறு முத்தி, சத்தி யொளியே. (௩௫)

---

மகவுமா மாறுபோல நீயும் சிவந்த சத்திவடிவாகியது உனதுரு வைப் புவனவுருவென வகுத்தருளுதற்கோ? எ-று. தேவி தன் னுருவைப் புவனவுருவாக வகுத்து வேறுபடுத்தத் தருதலால், அன்னையும், அப்புவனம் தானுயிருத்தலால் மகவும் ஆமாறு காண்க. பரம் - மேல்.

(௩௫) சத்தியாகிய ஒளியே! நீயிருந்து கருணைசெய்யும் நினது ஆக்கினைச் சக்கரத்துக்குள்ளாக உட்பட்டுச் சூரியசந்திர வடிவாகிய பரஞான சத்தியோடுகூடிய முறைமையையுடைய பரமசிவனைப் பணிகுவாம் எ-று. நாடோறு மெழுகின்ற சூரிய சந்திர கிரணங்களைக்கடந்து மிகு காந்தியோடு பிரகாசிக்கும் ஆத் மலோகமாகிய ஓர் தலத்திலே பரமானந்த விருப்பந்தருமொளி யாக இப்பரமசிவனை ஒருகாலத்தில் நினைப்பதுதானே பெறத் தக்க முத்தியாகும். அதனால், அங்ஙனம் பணிகுவாமென்பது கருத்து. பரஞானசத்திக்குச் சந்திரனையும் பரமசிவனுக்குச் சூரியனையும் உவமித்தபடி. அதனால் என்பது எஞ்சிநின்றது. இது பிற்கவிக்குங் கொள்க. கொல் அசை.

## விசுத்திச்சக்கரத்திலே தரிசித்துமியல்பு.

இறைவிநின் விசுத்தித் தலத்திடை பளிங்குநிற வெழிலொடுல கருடங் தையா, யுறையுமொரு சிவனையு மவன்போலு மாரம்ப முடையவனை யும்ப ணிகுவா, நிறைமதி யொளிக்கொத்த நெறியேகு முமதொளியி னிலவுண்டு பசிக வேவதோர், முறைபெறுச கோரமென வுலகுபா தகவிருண் முடித்துக் களித்து றையுமே. (௩௬)

## அநாகதசக்கரத்திலே தரிசித்துமியல்பு.

முன்னைத் தபோதனர்த மிதயமா னதவாவி முதுஞான முளரி நறவார்ந், தன்னத்தின் வடமொழிப் பெயர்பெற்று மொழிபயிலு மறுமூன்று விஞ்சை விரிவாற், பன்னப் பொதிந்ததீ வினைநீரி னற்குணப்

---

(௩௬) ஆரம்பம் - முதன்மை. உமதொளியினால் உலகுபாதக விருள்முடித்துக் களித்துறையுமதனால் பணிகுவாம் என்க. ஒத்தநெறியேகும்-ஒத்தபடி பரம்பும். உலகென்றது - உலகிலுள்ள ஆன்மாக்களை. இருவரொளிக்கும் சந்திரனொளிக்கும், பாதகவிருளுக்கும் பசிக்கும், சீவான்மாக்களுக்கும் சகோர புட்களுக்கும், களைதற்கும் முடித்தற்கும், உவமித்தபடி.

(௩௭) ஆன்மாக்களிடத்து இருவினையுங் கலந்திருத்தலின் தீவினை நீரிற் குணப்பால் பிரித்துண்டு என்றது. முதுஞான முளரியென்றமையின் அதனறவு பேரின்பத்தேனென்க. அன்னத்தின் வடமொழிப்பெயர் ஹம்ஸம் ; ஹம் சிவபீஜம், ஸம் சத்திபீஜம். இதுபற்றியே ஹம்ஸமந்திரம் சிவஞ்சத்திகட்குரியதென்பதுணர்க. அறுமூன்றுவிஞ்சை—வேதம் நான்கும், உபவேதம் நான்கும், வேதாங்கம் ஆறும், மீமாஞ்சை நியாயம் புராணம் ஸ்மிருதி என்னும் உபாங்கநான்குமாம். அப்புட்களொளித்த வொலியே இப்பதினெட்டு வித்தைகளென்பது. பன்ன—

பால்பிரித் துண்டு களியா, மன்னப் படுஞ்சிறைப் புள்
ளிணையை நாடொறும் வழுத்துது மலர்க்க மலேயே.()

மணிபூரகசக்கரத்திலே தரிசித்துமியல்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரித்தவிருள் விழுங்குசத்தி மின்ளுெடும்பன் மணியிந்த்ர வில்லி ளுேடுங், தரித்தமறை பரவுசிவ தபனகதி ரெறிப்பவதிற் றழன்று தீயிற், புரித்துல கங் குளிரவொளி தழைத்தொளிரப் பொழியமுத தாரை மாரி, பரித்தமணி பூரகத்துன் பச்சைமுகில் பணிவனருள் பழுத்த கொம்பே. (௩அ)

சுவாதிட்டானசக்கரத்திலே தரிசித்துமியல்பு.

நிலைபெறு சுவாதிட் டான நின்சிவ வனலு நீயு, மில கிய தன்மை நெஞ்சத் திறைஞ்சுவ முரைக்க மாட்

---

ஆன்மாக்க ளாராயத் தொடங்க. மன்னப்படும்-நிலைக்கப்படும். சிவனுந்தேவியும் அநாகதத்தில் இரண்டன்னங்களாய்க் காணப் படுதலின் புள்ளிணையை வழுத்துதும் என்ருர்.

(௩அ) சகலவித்தையும் தரித்த மறைபரவும் பிரளயகால வுருத்திரனுகிய சூரியனுடைய கிரணங்கள் அப்பிரளயகாலத்தி லே எறிப்ப உலகங்கள் அதிலே கருகுமாயின், அவை பழயபடி யே குளிரும்வண்ணம் ஒளிதழைத்தொளிரச், சத்தியாகிய மின் னுடனும் பன்மணித்தாழ்வடமாகிய வில்லுடனுங்கூடிப் பொழி கின்ற அமுததாரையையுடைய மாரியைச்சுமந்த உன் கணவ ராகிய பச்சைமுகிலை மணிபூரகத்திற் பணிவேன். எ-று. விரித் த புரித்த வலித்தல் விகாரம். தபனன் - தன் கிரணத்தினலே உலகைத்தபிக்கச் செய்பவன்.

(௩௯) இனிதருளுமாகலின் ஒருவாறு நெஞ்சத்தினல் இறை ஞ்சுவம், வாக்கினுலுரைக்கமாட்டேம் என்பது. 'கண்டவர்விண் டிலர், என்பது தோன்றநின்றது. நின்சிவவனல் - நின்னுடைய

டே, முலகமப் பார்வை செந்திக் குருகினின் கருணை பொங்கி, யலையெறி யமுதப் பார்வை யளித்தினி தருளு மம்மே. (௩௯)

மூலாதாரசக்கரத்திலே தரிசித்துமியல்பு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீநந்து மூலவா தாரத்தி லானந்த நிர்த்தமிடு மிறைவி நின்னொ, டானந்த தாண்டவம் விளைத்துநவ வடிவுபெறு மாதிசிவ னைப்ப ரவுவாம், வானந்தொடுத்துலக மடையப் படைத்திடுமிவ் வகையின் புணர்ச்சி யலவோ, ஞானங்கொ டனைதந்தை யென வுலகு தெளிவுற நடத்துவது ஞான வொளியே. (௪0)

சிவனாகியவனல். அப்பார்வை - அச்சிவனுடைய பார்வை. அம்மையென்னும் பெயரின், ஈற்றைகாரம் விளியின் ஏகாரமாய்த் திரிந்தது; "அன்னேநின்னையல்லால்" என்பதில் அன்னையென் புழிப்போல.

(௪0) நந்தும் - ஆக்கம் பெற்றிருக்கின்ற. நவவடிவு - காமம் இழிப்பு உருத்திரம் வியப்பு அச்சம் வீரம் நகை கருணை சாந்தம் என்னும் நவரசவடிவு. இவை நிருத்தத்திற்கே பெரும்பான்மையும் உரியன. புணர்ச்சியால் ஞானங்கொடு உலகுதெளிவுற வல்லவோ? அனை தந்தையென நடத்துவது என இயையும். வகையின் என்பதில் இன் சாரியை. நடத்துவதாகிய அதனால் பரவுவாம் என்பது. மூலவாதாரம் தமிழ்ச்சந்தி.

ஆநந்தலகரி முற்றிற்று.

☞ இந்நாற்பதுகவியும் தேவியினின்பப் பெருக்கைக் கூறுதலால் ஆனந்தலகரி யென்றும், இனிவருங் கவிகளை அழகின் பெருக்கைக் கூறுதலால் சௌந்தரியலகரி யென்றும் சொல்லப்படும். லகரி - பெருக்கு.

தேவிசகாயம்.

# சௌந்தரியலகரி.

## திருக்கூந்தற்புகழ்ச்சி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அந்தர மணித்தபனர் பல்மணியின் வடிவெடுத் தமருமுன தம்பொன் முடிமேல், விந்துகலை நவமணியி னெழுகுபல நிறமடைந் திலகுமதி சயவடிவினற், சந்த்ரகலை நன்றுநன் றென்பர்சில ரன்றன்று சந்த்ர கலை யிந்த நிறமோ, விந்த்ரசிலை யிந்த்ரசிலை யென்பர் சில ராதலால் யாதென வழுத்த வுமையே. (சக)

அலர்ந்தகரு நெய்தலங் காடெனக் கடைகுழன் றறநெய்த் திருண்டு செரிவோ, டிலங்குறு மியற்கை மண மெண்டிசை யளப்பவதி லிதழ்மூழ்கு நறைவி ழைவினற், பொலங்கொண்முடி யாகண்ட லேசர் பொற் றுணர்விரி பொதும்பர்மது மலர்ப டிவதோர்,

(சக) அந்தரமணித்தபனர் - விண்மணியென்னும் ஆதித்தர். ஆதித்தர் பன்னிருவருக்கும் ஏற்பப் பன்னிருமணி யென்னது தலைமைப்பற்றி நவமணியெனினும், அவற்றோடு நாகமணி சந்திர காந்தம் சூரியகாந்தமென்னு மூன்றுங்கூட்டிப் பன்னிருமணி யெனக்கொள்வர் பிறநூலாசிரியர். சந்திரகலை இவ்வண்ணம் பெற்றது நன்றுநன்றென்பர்சிலர்; பலநிறமுடைமையின் இந்த் ரசிலையென்பர்சிலர்; ஆகலின் யான் இவ்விரண்டனுள் யாதென வழுத்துவேன். எ - று. வழுத்த என்பதுமுற்று.

(சஉ) இயற்கைமணம் எண்டிசையு முலாவி தேவலோக மளவுமளாவலால் தம்மிதழ் மூழ்கவேண்டுமென்னும் மணவிருப் பத்தினல் இந்திரனுடைய பஞ்சதருக்களின் மலர்களும் வந்து

சிலம்பளி பரந்தவுன தோதியென் மனத்திருட் செ
றிவுதெற வருள்க மலையே. (சஉ)

மோதிய வெங்கதிர் மீளவெ ருண்டிருண் மூடவொ
துங்கிய வாறேயோ, சோதிமு கங்கவி னேறி வழிந்
தன சோரவி டுங்கவர் காலேயோ, வோதிபி ணைந்து
பின் வீழவ கிர்ந்தத னூடெழு தும்ப்ரபை யாதே
யோ, கோதறு சிந்துர ரேகைவ ளம்பிறர் கூறுவ தன்
றிது மாதாவே. (சங)

திருமுகப்புகழ்ச்சி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கூரெயிற்றி னகவிதழுங் கொண்கர்விழி வரிவண்
டுங் குழற்படிந்த மதுகரத்தின் குழாமுங் கூடிப்,
பேரியற்கை மணம்பொதிந்து புன்மூரன் முகையவி

---

படியவிரும்பும் கூந்தலானது, என்மனவிருட்பிழம்பை யகற்ற
அருள்வாயாக. எ-று.

(சங) கூந்தல் பின்னலாகிப் பிணைந்து முதுகில் விழவகிர்ந்து
அதனடுவே நெடிதாக எழுதப்படும் பிரபயைச் சிலர் சிந்துர
ரேகையின் வளம்என்பர். அது என்மனத்திற்குப் பொருந்துவ
தன்று; இருளஞ்சமோதிய சூரியன் பின்னர் அவ்விருள் ஒருங்
குதிரண்டுவந்துமூட அதுகண்டஞ்சித் தான் அதனைக்கண்டு ஒது
ங்கிஓடியவாறோ? அன்றி முகமாகிய குளத்தில் அழகாகிய நீர்
நிரம்பிவழிந்தன. சழிந்துபோக விடப்படுங் கலிங்கோ? யாதோ
அறிகிலேன். எ-று.

(சச) முகதாமரை என்றும்வாட்டமுறுத பற்களாகிய உள்
ளிதழ்களும், பொறியில்லனவாகிய சிவபெருமானுடைய கண்க
ளாகிய வரிவண்டுகளும், கூந்தல்வண்டுகளுங் கொண்டு இயற்

மூப் பிறழுமுன தருணமுக கமல மென்று, லோரியற் கை வாடுமிதழ் பொறிவண்டே படிவதுமற் றோரி யற்கை செயற்கைமணம் போது செய்யு, நீரியற்கை மலர்க்கமல மிதற்குடைந்து பங்கமுற னீதியென்ப தியாரறியார் நிகரின் மாதே. (சச)

திருநுதற்புகழ்ச்சி.

கலிவிருத்தம்.

கோதை நீண்முடி கொண்டொளிர் திங்கள்சேர்
பாதி வாணுத லென்று படிந்ததோ
வீது கூடி யிரண்டு நிறைந்ததோ
சீத பூரணத் திங்கள் சிறந்ததே. (சரு)

---

கை மணத்ததாய் எப்பொழுதும் விரிவதின்றிப் புன்முறுவலரும் பவிழப் பிரகாசிக்கும்; நீர்த்தாமரை இதழ்வாடுமோரியல்பும், மலர்ந்துழிப் பொறிவண்டே படிவதாகிய பிறிதோரியல்பும், நறுநீரினுலும் பருவத்தினுலும் வாய்ந்த செயற்கைமணமும், போதாகி விரிதலும் உடையது; ஆயின் இம்மலர் அம்முக தாமரைக்கு உடைந்து பங்கமுறுதல் நீதியென்பது யாவரறி யார் எவருமறிவர். எ-று. பங்கம் - கீழ்மை, சேறு. சுழற் படிந்தவண்டு - பொன்னந்தும்பி. அது தாமரையிற் செல்லா தென்க. வாடுதல் - பழம்பூவாகி யுதிர்தல். போதுசெய்தல் - மொட்டாகி முறுக்கவிழ்தல். இயற்கை மணமென்றது - வா யின்கண் இயல்பாகத் தோன்றும் மணத்தினை. எயிற்றின் என் பதில் இன் சாரியை.

(சரு) கோதையே! முடியிற்சூடிய திங்களிற்பாதிவந்து நுதலாகப்படிந்ததோ? உவாவிற் பூரணத்திங்களாகச்சிறந்தது இவையிரண்டுங்கூடி நிறைந்ததோ? எ-று. தேவிக்கிளம்பிறை யுண்டென்பதைப் பதினேந்து இருபத்துமூன்றுவது பாடலினுங் காண்க.

## திருப்புருவப்புகழ்ச்சி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருவிழிச் சுருப்பு நாணுன் கண்மல ரம்பு கன்னற், புருவவி னடுவொ ழித்தல் போன்றது வளைத்துப் போர்மேல், வருமதன் பிடித்த கைக்குண் மறைந் தது போலு மென்றாற், றிருமகள் பரவு மம்மே சிலை யிது புருவ மன்றே. (சசு)

## திருவிழிப்புகழ்ச்சி.

கொச்சகக்கலிப்பா.

ஒருமலர்க்க ணிரவிவலத் துதித்தருளு நன்பகலு, மொருமலர்க்கண் மதியமிடத் துதித்தருளும் பேரி ரவுந், திருநுதற்கட் பொற்கமலச் செந்நிறத்தீ விளைத் தருளும், விரவுசெக்கர் மாலையுமுன் விழைவகலா விழுப்பொருளே. (சஎ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கோலநகர் விசாலையாய் நிரந்தரகல் யாணியாய்க் குவலயத்தா லயோத்தியாய்க் குலமதுரை தானாய்ச், சாலவொளிர் போகவதி யாயமுத தாரையாய்த்

---

(சசு) அம்மே! உனது கருவிழியாகிய வண்டுநாணையும், கண்ணாகிய மலரம்பினையுமுடைய புருவமாகிய கருப்புவில் இடையில் விட்டிருப்பது போல்கின்றது; அது அதனைவளைத்துப் போர்மேல்வந்த மதன்பிடித்த பிடிக்குள் மறைந்ததுபோலு மென்பரேல், அது வில்லே: புருவமன்று. எ-று.

(சஎ) முக்கண்களும் உதித்துத் தோற்றுவிக்கும் முக்காலங்களும் தேவியின் ஆக்ஞையைக் கடவாமை கூறியபடி. விரவுதல் - பகலுமிரவுஞ்சந்தித்தல்.

(சஅ) விசாலை-விசாலத்தையுடையது, கல்யாணி - மங்கலத்தை யுடையது, குவலயத்தாலயோத்தி - நீலோற்பலமலரால்

தண்ணளியா லவந்தியாய்ச் சகவிசையை யெனலாய், நீலவிழி புடைபரந்து நெடுநகரப் பெயர்கவர்ந்து நீண்டுசேந் தரிபரந்து நிகரொழிக்கு மென்று, லாலவிட மமுதெனக்கொண் டருந்தியவுன் மத்தர்புர மதனிலொரு புறங்கவர்த லதிசயமோ தாயே. ()

கொச்சகக்கலிப்பா.

இருசெவியுண் பலகவிதை யிணரொழுகு பசுந்தேனிற், பெருகுநவ ரதமருந்திப் பிறழ்ந்திடுமுன் பிணைவிழியாங், கருநிறவண் டிணைகளிப்பக் கண்டு

---

வெல்லப்படாதது, மதுரை - அடியவர்களுக்கு மதுரமாய் இன்பம் தருவது. போகவதி - சகலபோகங்கட்கும் இருப்பிடமாவது, அமுததாரை - அமுதத்தைத்தரிப்பது, தண்ணளியால் அவந்தி - கிருபையினால் (அளிப்பதாயிருத்தலால்) மலடித்தன்மையில்லாதது, சகவிசையை - சகத்தை வெல்வது. இது ஈண்டுக்கூறிய விசாலைமுதலிய சப்தபுரிகளையேயன்றி மற்றுஞ்சகத்திலுள்ள நகரங்களையும் வெற்றிகொள்வது என்பது தோன்றி நின்றது. விழிகளே பலபுரங்களைச் சொற்பொருட் காரணத்தாற் கவரவல்லனவாயின், நீ உன்மத்தர் புரமதனில் ஒருபுறங் கவர்ந்த ததிசயமோ? என்றபடி. குவலயம் - பூமி கருங்குவளை. அயோத்தி - வெல்லப்படாதது. நீலவிழி - நீலமலர்போலும் விழி. புரம் - நகரம், தேகம். சிலேடைப்பொருள்களை ஏற்றபெற்றிகொள்க. அஷ்டகர்ம சித்தியின் பொருட்டு இங்ஙனம் திருக்கண்களை எண்வகை நகரினிசைத்ததென்பது வடமொழிச் சௌந்தரியலகரி யுரையிற்காண்க.

(சசு) இருசெவிகளாலும் உண்ணப்பட்ட பலகவிதையாகிய இணர்களிலொழுகும் பசுந்தேனிற்பெருகிய நவரசமருந்தி விழவண்டிரண்டும் களியாநிற்க; நெற்றிக்கண்ணாகிய வண்டு அதுமனம் பொறுது சிவந்தநிலையை ஆடியிற்பாராய். எ-று. கடைக்கண் காதளவுசேறலால் கவிதைநவரசமருந்தியென்றும் சிவப்பு

பொரு தென்னேயோ, வரிநுதற்க ணளிசிவந்த
வளம்பாராய் மலர்க்கொடியே. (சகூ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரனிடத்திற் பேரின்ப மருளுமவ னல்லாற்பா
லருவருக்கு மவன்முடிமே லணிநதியைச் சீறும்,
பரவுநுதல் விழியழன்முன் பார்த்திலபோ லதிசயிக்
கும் பணியாய பணிவெகுளப் பயந்தனபோ லொ
டுங்கும், விரைமுளரிப் பகைதடிந்து வீரரதம் ப
டைக்கும் வினவுதுணைச் சேடியர்க்கு விருந்துநகை
விளைக்கு, மிரவுபக லடிபரவு மெளியனைக்கண் டருள்
புரியு மித்தனையோ படித்தனவுன் னிணைவிழிக
டாயே. (ருo)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இகல்பொரக் குழையை முட்டு மிமைமயி ரொ
ழுங்கிற் றாவ, னிகரறு நித்தர் யோக நீக்கிவெம் போ
க நல்குஞ், சிகரவெற் பரசன் றொல்லைத் திருமர
பென்னுந் தெய்வ, மகுடமா மணிநின் கண்கள் வய
மதன் வாளி தானே. (ருக)

---

சினக்குறிப்பாதலால் சிவந்தவளமென்றுங் கூறினர். என்னும்
ஏயும் ஓவும் இடைச்சொற்கள்.

(ருo) சாந்தமென்னும் சுவை மெய்ப்பாடுமுதலிய விகாரம்
பெருமையின் நாடகநூலின்படி காமம் இழிப்பு உருத்திரம்
வியப்பு அச்சம் வீரம் நகை கருணையென்னும் எண்வகைச்சுவை
யுமே உடன்பட்டு அவை கண்களி னிலவல்கூறியபடி. கருணை
யைநோக்கி அவலங்கோடலும் அந்நூற்றுணிபே.

(ருக) வெற்பரசன் திருமரபென்னுந் தெய்வமகுடத்திற்
பதித்த மணிபோல்வளே! இமைமயிராகிய ஒழுங்கினையுடைய
அம்பினிறகு யோகநீக்கிப் போகநல்குமாகலின், நின்கண்கள்
மதன்வாளிதானே. எ-று.

வரிவிழிச் செம்மை வெண்மை வனப்புறு கரு
மை மூன்று, மெரிதெறு கற்ப காலத் திறந்தமுப்
பொருளுந் தோன்றுங், கருவெனக் குணங்கண்
மூன்றின் காரண மென்னப் பெற்ற, லருமறைப்
பொருளே யுன்ற னருளலா துலக முண்டோ. (௫௨)

அம்மைநின் கருணை பொங்கி யலையெறி நயன
வேலை, மும்மணி கெழுமுன் றொண்டர் மும்மலங்
களைய மூழ்கச், செம்மைநன் சோணை யாறு தெளி
கங்கை யமுனை மூன்றுந், தம்மயத் தொடும்வந் துற்
ற தன்மையீ தென்பர் மிக்கோர். (௫௩)

இடம்படர் கொடியே நின்க ணிருசெவிக் குரைப்ப
தேதென், றடர்ந்தெழு கயலின் கண்க ளடைப்பில

(௫௨) விழியின் முந்நிறமும் மும்மூர்த்திகளும் தோன்று மூலமெனவும், முக்குணங்களின் காரணமெனவுங் கூறப்படு மாயின், உன்னருளன்றி உலகமென ஒன்றுண்டோ? எ - று. எரி - ஊழித்தீ.

(௫௩) நயனவேலையிலுள்ள செம்மணி வெண்மணி கருமணி யென்னு மூன்றும் சோணையுங் கங்கையும் யமுனையுமாகிய நதிகள் தத்தம் நிறங்களோடுவந்து கூடிய தன்மையாமென்பர் மிக்கோர். எ - று. மணி என்றது நிறத்தை. * "கருமணியிற் பாவாய்" என்றார் தெய்வப்புலவரும். கெழுவுந்தொண்டரென இயையும். * காதற் சிறப்புரைத்தல் - ௩.

(௫௪) கண்களுக்குவமிக்கப்படுவனவற்றுள் கயல்களான வை அக்கண்கள் காதளவு சேறலை நோக்கி இவை நம்மை வருத்தச் செவிக்குரைக்கின்றனவோவென்று பயப்பட்டு என்றும் கண்ணிமைத்திலவெனவும், ஏனைக்கமலநெய்தல்களில் வசிக்குந் திருமகள் ஒன்றினுறையுங்கால் மற்றொன்றற்கு ஆபத்துவினை

பயப்பட் டம்மா, கடும்பகற் கமல வீடுங் கங்குல்
வாய் நெய்தல் வீடு, மடைந்தனள் கமலை யொன்
றுன் றடைப்பன கண்டு கண்டாய். (௫௪)

இணைவிழி யிமையா நாட்ட மெய்திய தலரத்
தோன்றும், பணைநெடும் புவன மிந்தப் பார்வைசற்
றிமைக்கு மாயிற், றணையிழந் தழிவ தெண்ணித்
துணிந்தநின் கருணை யென்றுற், கணையினுங் கொ
டிய தென்னக் கடவதோ கடவுண் மாதே. (௫௫)

நெடியகட் கரிய நெய்த னிறையருட் சலதி யெய்
தாக், கொடியனேன் பிறவித் துன்பக் குரைகடல்
கடந்து மூழ்க, விடினதிற் குறைவ துண்டோ மெய்த்
தவர்க் கொழிந்து ருதோ, கடிநகர் நிலவு காட்டிற் கா
யுமே கருணை வாழ்வே. (௫௬)

---

யாதபடி அதனதனிதழ்க்கதவடைத்துவிட்டு மாறிமாறிப் பகலு
மிரவும் வசிக்கின்றனளெனவும் இழித்து இம்மூன்றுகண்ணிற்கு
ஒப்பன்மை தோன்றக்கூறியபடி. மீன்கண்களுக்கு இமையின்
மையின் என்றுங் கண்களடைப்பில என்றது. பயப்பட்டு என்
பது அச்சுற்று நீரிற்பட்டு எனப்பொருள் படுதலின் சிலேஷை.
கண்டு செய்து அம்மா கண்டாய் அசைகள்.

(௫௫) கண் அலர்தல் காரணமாகத்தோன்றும் புவனம் அது
சற்றிமைக்கின் அழிவதுகருதி இமையாநாட்டமாகவே யிருந்த
தென எவருமிசைப்பரேல், அத்தகைய கருணையுடைய கண்
களைக் கணையினுங் கொடியதென்பது முறையதோ? எ-று.

(௫௬) அருட்சலதி மூழ்கவிடவென இயையும். அக்கருணைச்
சலதி மெய்த்தவரையன்றி என்னை மூழ்கச்செய்யாதோ? நகரி
னெரிக்குநிலவு காட்டினுமெரிக்குமே: ஆகலின் என்னையும் மூழ்
கச்செய்யும். எ-று.

கருங்குழ லுதற்கட் பின்னற் கவின்கடைக் கபோ லந் தாழ்ந்த, வருங்குழை கடந்த கண்ணி னயிற்கடை யனங்க சாப, நெருங்குறத் தொடுத்த வேலி னிமிர்த லை யேய்க்கு மென்றுன், மருங்கில்பொற் றிருவே யாருன் மதர்விழி பரவ வல்லார். (ருஎ)

திருச்செவிப்புகழ்ச்சி.

தோகைநின் கபோலஞ் சார்ந்த துணைநிழற் சுவடுந் தோடு, மாகவிவ் வுருளை நான்கி னுனன விரதம் வாய்த்தோ, வேகநன் புடவி வட்டத் திருசுட ராழித் திண்டேர்ப், பாகரைப் பொருது மாரன் பழம்பகை தீரப் பெற்றுன். (ருஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேரி நாண்ம லர்க்குள் வாணி விலையில் பாட லமுதெலாஞ், சேரமாம டந்தைநின்செ விக்கு ணுவ ருத்

(ருஎ) நுதலின்மேற் பின்னிய கருங்குழற் பின்னலின் கடை பொருந்திய கபோலத்திலே தங்கிய அரியகுழையைக் கடந்த கண்ணின் கூரியகடையானது அனங்கனம்பினது நிமிர்ந்ததலை யை நிகர்க்கு மென்பது. தாழ்தல் - தங்கல். மருங்கின்மை இடைநுண்மையின் மேற்று.

(ருஅ) கபோலங் கண்ணுடிபோலுதலின் அவற்றிற்பதிந்த இருதோடுகளி னிழற்சுவடும் இருதோடும் உருளைகளையும், முகமும் முகமேற்கவித்தமுடியும் தேரினடிமுடிகளையும், ஒத்தலின், இத்தேவி திருமுகத்தையே மன்மதன் தேராகக்கொண்டு, இருசுடர்களையும் ஆழியாகப்பெற்ற தனித்த புடவித்தேரையுடைய பரசிவனை வென்றுனென்பது. பழம்பகை - தன்னைநெற்றிக் கண்ணுலெரித்த முற்பகை.

(ருகூ) மாமடந்தையே! வாணிதன்பாடலமுதெலாம் ஒருமிக்க நின்செவிக்கு உணவாகஅருத்த, நீ முடியசைத்தலும்

தவே, யார மாலே முடிய சைப்ப வாடி யெற்று குண் டலம், பூரை பூரை யென்ற சொற்பொ லிந்த வோ சை பெற்றதே. (௫௯)

திருநாசிப்புகழ்ச்சி.

இமய மன்னன் மரபில் வெற்றி யிடுப தாகை யனைய வென், னமலே யுன்றன் வதன துண்ட வணிசி றந்த மணியையோ, விமல மன்னு கவிஞர் முத்தை வெற் பில் வல்லி யலர்வதோர், கமல மன்னு குமிழ ளித்தல் கண்டதல்ல வென்பதே. (௬0)

திருவிதழ்ப்புகழ்ச்சி.

இறைவி நின்னி தழ்ச்சி வப்பி யற்கை யித்தொ டி ணைசொனு, னிறைகொள் கொவ்வை யிந்நி றத்தி னிழல் பெற்று விம்பமா, யுறைதல் கொண்டு நாணு மற்றெரு ருவமை யில்லே யுண்டெனு, வறைக டற்று கிர்ப்ப முக்கி னன்று சொல்வ னளியனே. (௬௧)

---

குண்டலமசைந்து போதும்போதுமென்ற சொற்போலப் பொ லிந்த ஓசைபெற்றது. எ - று. சேர - ஒருமிக்க. பூரை - பூர ணம்; இது போதுமென்னும் பொருட்டு.

(௬0) பதாகையனைய அமலேயே! மலேக்கொடியி னலர் வதோர் கமலத்தில் நிலேபெற்ற குமிழம்பூ முத்தையளித்தல் கண்டதல்லவெனக் கவிஞர்சொல்வது நினது முகத்திலுள்ள மூக்கினணியின் முத்தையோ? எ - று. முத்தையளித்தலென இயையும்.

(௬௧) கொவ்வைப் பழத்தைக்கூறின் அது இவ்விதழ்நிறத்தி னெளிபெற்று விம்பமென்னும் பெயருடையதாய்த் தானுறை தலேயுட்கொண்டு நாணும். பவளம் பழுப்பதின்மையால் என் றும் உவமையில்லே; பழுக்கின் அன்று உவமையுண்டெனச் சொல்வன். எ-று.

திருநகைப் புகழ்ச்சி.

அன்பு முற்றிவடி வாய வம்மைநின தான னத்துமதி
நகைநிலா, நன்பு றத்தமுத மொழுகு மாமதுர நறை
கொள் சீதளம யின்றவா, யின்பு ளிப்பலது வட்டு ரு
தினியெ னத்தெ விட்டியச கோரம்வான், முன்ப ரப்
புநில வுண்ணு மாலுனது மூர லுக்குநிகர் மூரலே. (

திருவாய்ப்புகழ்ச்சி.

விள்ள நாவுரை யெழுந்தொ றுந்தலைவர் வீர மும்
புகழு மழகுமே, தெள்ளு பாடன்மது ரம்ப ழுத்த
னைய செய்ய கேழொளிவ னப்பினு, லள்ளன் மாமல
ரை விட்டு வாணியுன தருண நாவுறைய வெள்ளையா,
யுள்ள மேனியுமெ னம்மை நீயருள வுன்னி றம்பெறு
வதொத்ததே. (௬௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அற்றையருட் சிவசேடஞ் சண்டனுண வதுபொ
ரு தாவ நீரக், கற்றைமலர்க் குழலுமைநின் கருப்பூர

---

(௬௨) அம்மையே! நினது நகைநிலவின் புறத்திலே யொழுகும் அமுதத்தில் மதுரத்தையும் மணத்தையும் சீதளத்தையுமுண்ட சகோரப்புட்கள் அதுதெவிட்டும்படி வான்மதியினிலவு தித்தித்தபுளிப்பாயிருத்தலால் அதனையுண்ணும். அதனால் வேறு ஒப்பின்மையின் மூரலுக்குநிகர் மூரலே: எ - று. தெவிட்டிய வென்னும் எச்சம் உண்ணுமென்னும் முற்றைக்கொண்டது.

(௬௩) மொழிதற்கு நாவெழுந்தோறும் சங்கரருடைய வீரமும் புகழும் அழகுமேசொல்லும்நின்பாடலினது மதுரம்பழுத்தாலொத்த செங்கேழ்வனப்பினால் ஒத்தது எனமுடிக்க. வாணி நாவினுறைய அந்நாவின்செந்நிறம் வெள்ளைமேனியிற் பரந்தலால், உன்னிறம் பெறுவதொத்தது. என்றபடி. தெள்ளுதல் - ஈண்டுச்சொல்லுதல்.

சகலமதிச் சகலம் போல, வுற்றதிருத் தம்பலத்தி ஞெருசகல மேனுமினி துண்டு வாழப், பெற்றிலரே லமரரெனும் பெயர்பெறவு மிருந்தனரோ பிழைப் பில் விண்ணோர். (௬௪)

பசுத்தமலர்க் கொடிகருணை பழுத்தனைய கொம் பேநின் பரமர் பொற்றேள், விசைத்தொழிலைக் கலைவாணி தனிற்பாடிப் பாடியவண் மெலிவ தல் லா, லசைத்திலர்பொன் முடியுனது மதுரமொழிக் கசைத்தனரென் றதற்கு நாணி, யிசைத்தொழிலைக் கைவிட்டா ளெழில்வீணை யுறையிலிட்டா ளேது செய்வாள். (௬௫)

## திருச் சுபுகப் புகழ்ச்சி.

மகவாசை யாலிமைய மலையரையன் மலர்க்கை தொட மனத்து ளன்பு, புகவாசை யாலிறைவன் கரத் தேந்தப் பொலிவுறுநின் சுபுகம் போற்றின், முகவாசி

(௬௪) பிழைப்பில்விண்ணோர் தம் ஆவல்தீரப்பெற்றிலரேல், அமரரெனும்பெயர் பெறவுமிருந்தன ராவரோ? என்பது. தம் பலத்தில் ஒருசிறிதேனும் பெற்றமையானே அமரரெனும் பெ யர்பெற்றனரென்பது தோன்றநின்றது. மதித்துண்டம்போ லக் கருப்பூரத்துண்டமுற்ற தம்பலமென்க. அன்று என்பது அற்றையெனத்திரிந்தது. சகலம் - துண்டம். தம்பலம் - தாம் பூல மென்னும் வடமொழித்திரிபு. அமரர் - மரிப்பில்லாதவர்.

(௬௫) மதுரமொழியாவது வாணிபாடும் பாட்டைக்கேட்டு இது நன்றுயிற்றென்னுமொழி. பசுத்த - பசுமைபெற்ற. விச யத்தொழிலென்பது தொகுத்தல் விகாரமேற்றது.

(௬௬) தொடவும் ஏந்தவும் பொலிவுறும் நினது மோவாயைப் புகழ்ந்து கூறின், அரன் தன்முகச்செவ்வியைக் கண்ணாடியிற்

யரன்படிமக் கலம்பார்க்க விட்டமுகிழ்க் காம்பு
போலுஞ், சகவாழ்வை யிகழ்ந்திதயந் தனித்தவர்தந்
தவக்கொழுந்து தழைத்தகொம்பே. (௬௬)

திருக் கழுத்தின் புகழ்ச்சி.

வயங்குறுநின் றரளவட மான்மதச்சே றளையமது
மத்தர் மேனி, முயங்குதொறு மெழுபுளக முட்
பொதிந்த பசுங்கழுத்து முகமுங் கண்டா, லியங்கு
புனற் கருஞ்சேற்றி னெழும்வலய முள்ளரைத்தா
ளீன்ற கஞ்சம், பயம்புகுதல் கடனன்றே மாற்றிலாப்
பசுமையொளி பழுத்த பொன்னே. (௬எ)

செந்திருநின் றிருமணத்திற் சேர்ந்தசர மூன்ற
மூந்தித் திகழ்வ தென்கோ, மந்தரமத் திமதார மூவ
கைநா தமுமெல்லை வகுத்த தென்கோ, கொந்திரை

பார்க்க முகிழாகவிட்ட காம்புபோலும். எ-று. சுபுகம்—மோ
வாய். வாசி - தன்மை. படிமக்கலமாகவுவமித்தது தேவியின்
முகத்தை.

(௬எ) உரோமச்சிலிர்ப்பு கழுத்து முகம் என்பவற்றிற்கு
முறையே தாமரைவலயமும் முத்துவடமும் கருஞ்சேறும்
முள்ளும் தாளும் பூவும் ஒப்பாகக்கூறித் தாமரையை இழி
த்தபடி. பயம் - அச்சம் நீர்.

(௬அ) செந்திருவே! மணத்தினுல் வந்து வண்டுமுழங்கும்
பூம்பாளையையுடைய கமுகுபோலும் செழித்தகழுத்திலுள்ள
இரேகைமூன்றும் இலக்குமிமுதலிய மூவரானுமே புகழவல்ல
ன. அவற்றைத் திகழ்வதென்கோ? வகுத்ததென்கோ? யான் யா
துசொல்லக்கடவேன். எ-று. மூன்றுபோற் கயிற்றேகூடிய
ஓரணியை ஏனைக்காலத் தின்றேனும் திருமணக்காலத்தில் முக்

யுந் துணர்ப்பூகங் கொழுத்தபசுங் கழுத்தின்வரைக் குறிகண் மூன்று, மிந்திரையுஞ் சயமகளுங் கலைமா தும் புகழ்வதல்லால் யானென் சொல்வேன். (௬அ)

திருத் தோட் புகழ்ச்சி.

முன்னமொரு தலைசினவுன் முதல்வரா லிழந்தவ யன் முகங்க ளுன்கா, லுன்னழகுக் கேற்றபசுங் கழைமணித்தோ ளொருநான்கும் வழுத்து கின்ற, வின்னமொரு சிற்றமெழுந் தரிதலையை யெனினு மிவ டடமென் றேளைச், சொன்னதலைக் கழிவிலை யென் றதிற்றுணிந்த துணிவன்றே சுருதி வாழ்வே.

திருக் கைப் புகழ்ச்சி.

திருமகடன் சிறடியாற் றுவண்டுமெதிற் செம்பஞ் சாற் செங்கேழ் பெற்று, மருமுளரி யெழில்படைத் த திதுவோநம் மியற்கையெதி ரலர்வ தென்றே, யிருகரமு நகைத்தநகை யொளியையுன தெழிலுகி ரென் றிறைஞ்சி நாளு, மருமறைகள் வழுத்துகின்ற ததிசயமோ பேதைமையோ வன்போ வம்மே. ()

---

கியமாகவணிவது இயல்பாதல் குறித்தும் தேவி சங்கீதவித்தை யில் வல்லவளாதலால் அது இம்மூன்றிசையிலே நடப்பது சரு தியும் இங்ஙனங் கூறியவாறு.

(௬௯) முன்னம் சினவிய முதல்வரால் ஒருதலையிழந்த அயன் பிற வுறுப்புக்களெல்லாம் இருக்கவும் தோள்களை வழுத்துவது அவ்வுறுப்பு எவர்க்கும் அபயந்தருவதனுலென்க.

(௭0) துவண்டும் பெற்றும் எழில்படைத்ததாகிய இம்முளரி யோ? நம்மியற்கையழகெதிரே அலர்வதென்று நகைத்தநகை யொளியை உகிரென்று வழுத்துகின்றதென இயைக்க.

## திரு முலைப் புகழ்ச்சி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நித்தரொரு பக்கமயி னிற்களிறுன் வட்டமுலை நிற்குமெழி லிற்ற னதுசீர், மத்தகமெ னத்தனில யிர்த்தொருக ரத்தைமுடி வைத்துறவு றத்த டவுமான், முத்தமுலை செப்புவதெ னக்களிறு பிற்குமரன் முற்புதல்வர் துய்த்த வமுதா, லத்தலைமை பெற்றனர திற்றிவலை கிட்டினுமெ னற்பவுயிர் முத்தி பெறுமே. (எக)

முக்கணிறை வர்க்குமயன் முற்றவெழின் முற்றுமுலை முட்டியசு ரப்பொ ழுகுபான், மக்களிரு வர்க்கருள வக்களிறு மிக்குகனு மட்டிளமை முற்று கிலரா, லக்கடலு தித்தவமு தத்தினையெ டுத்ததிலடைத்திருகண் முத்தி ரையின்வாழ், செக்கர்மணி

---

(எக) மயிலே! நினது மைந்தராகிய களிற்று முகக்கடவுள் நின்வட்டமுலையி னெழிலைநோக்கித் தமது மத்தகம் நினது மார்பி னெய்திற்றேவென ஐயுற்றுத் தடவிப் பார்ப்பரேல், அதன் எழுச்சியைப் புகழ்ந்துறுவதெங்ஙனம். அக்கடவுளும் முருகக்கடவுளுமுதலிய முதல்வர் அத் தனப்பாலைப் பருகிய அதனாலேயே எக்காலத்தினும் பிள்ளையாரென்று வழங்குந் தலைமையைப் பெற்றனராயின் அப் பாலின் ஓர்திவலை கிடைப்பினும் என் னற்பவுயிர் முத்திபெறும். எ - று.

(எஉ) பாலுண்டபுதல்வர் இளமைநீங்கி முதிர்ந்திலராதலால் பாற்கடலிலுதித்த அமுதத்தையடைத்துக் கண்ணுகிய முத்திரையிடப்பட்டு வாழ்கின்ற இருசெம்மணிக்கலச அளவே உனது தனம். அவை சாதாரணச் சிமிழல்ல. எ - று. இருகலசமெண

1808 4



மெய்க்கலச மத்தனையுன் வட்டமுலை செப்பலம லைப்பு தல்வியே. (எ௨)

கொற்ற வாரண முகம கன்பொரு குஞ்ச ரானன நிருதனு, ரிற்ற கோடுதி ரார மாலிகை யிதழ்ம ணிப்ர பை தழையவே, பெற்ற பாகபி னுக பாணிப்ர தாப மோடணை புகழெனு, வுற்ற தாயினு முனது பொற் றன முரைப டாநிறை செல்வியே. (எ௩)

தருண மங்கலை யுனது சிந்தைத ழைந்த பாலமு தூறினு, லருண கொங்கையி லதுபெ ருங்கவி யலை நெடுங்கட லாகுமே, வருண நன்குறு கவுணி யன்சிறு மதலை யம்புயல் பருகியே, பொருண யம்பெறு கவி தை யென்றொரு புனித மாரிபொ ழிந்ததே. (எச)

---

இயையும். முலைக்கண்-சூசகம். அகர இகரச் சுட்டுக்கள் முறை யே கால முற் பிற்பாட்டையுணர்த்தின.

(எ௩) நிறைந்தசெல்வியே! கயமுகாசுரனுடைய கோடொடி படப்பொருது அக்கோட்டினுதிர்ந்த முத்தினாற் றொடுத்து விநா யகக்கடவுளாற் றரப்பட்டுப் புனைந்த மாலையிலே நினது வாயி தழின் மாணிக்கவொளிவந்துதழைய அச் சிவப்பும் வெளுப்பும் சிவபெருமானது பிரதாபமுடன் புகழெனவுற்றதென்று புறத் தியல்புகள் புகலப்படினும் அத் தனத்தின்வளமை சாற்ற முடி யாது. எ - று.

(எச) மங்கலையே! ஆளுடையபிள்ளையாரென்னும் மேகம் பருகித் தேவாரமென்னும் மழையைச் சொரிந்ததாகலின், நினது சிந்தையினிரம்பிய பாலமுதுவந்து கொங்கையினூறி னால் அது பெருங் கவிதைவடிவாகிய அலைகடலாகுமோ? நீ சொல்வாயாக. எ - று. தருணம் - இளமை. அருணம் - குங்கு மக்குழம்பாற்பெற்ற செம்மை. புயல்பருகுவது கடலிடத்தாக லின் 'கடலாமோ?' என்றதென்க.

## திரு உரோமரேகைப் புகழ்ச்சி.

மூல மேநின் மகிழ்நர் கோப முதுக னற்பொ ருது வேள், கோல நாபி மடுவி னிற்கு ளிப்ப வந்த வெம் மையான், மேல வாவு தூம ரேகை வேரெ ழுங்கொ ழுந்தையோ, நீல ரோம ரேகை யென்று நீணி லங்கு றிப்பதே. (எரு)

முளரி மாதுன் முலேயி னேடு முலைநெ ருக்க விடை யில்வான், வெளியி னீல மோடி யுந்தி வியன்மு ழைக் கு னுழையவே, தெளியு நீரில் யமுனை நீவு சிறுத ரங்க மனையபே, ரொளியின் ஞால மருளு மீது ரோம ரேகை யென்னவே. (எசு)

## திருநாபிப் புகழ்ச்சி.

தூய கங்கை நிலேப டைத்த சுழித னத்து முகை யினு, லாய துங்க ரோம வல்லி யால வாலம் விரகவே,

---

(எரு) உடல் வெதும்பிய வேள் நினது நாபிமடுவிற் குளிப்ப அவ்வுடலினின்று மெழுந்த தூமரேகைக் கொழுந்தையோ ரோமரேகையென்பது. எ - று.

(எசு) முளரிமாதே! நின் தனத்தி னெருக்குடைமையால் நீலநிறம்பெற்ற மத்தியவாகாயம் ஓடி, உந்திமுழைக்குள் நுழைந்துமறைய அதனையுணராது யமுனாநதித் திரைபோன்ற அதனுடைய பேரொளிநோக்கி ரோமரேகையென்ன ஞாலமருளும். எ - று.

(எஎ) உந்தி கங்கைச்சுழியையும், தனமாகியமுகையைத்தாங் கப்பிறந்த ரோமவல்லி வளரும்பாத்தியையும், காமன் எவரையும் வெல்லுதற்கு ஆகுதிபண்ணத் தியரும்பும் ஓமகுண்டத்தையும், இறைவர் செங்கட்கஞ்சம் இடையீடின்றி மேவிய மடு

டைய ரும்பு மோம குண்ட மிறைவர் செங்க ணிடைவி டா, மேய கஞ்ச மடுவி னுந்தி வேறு ரைத்தென் விம லையே. (எஎ)

திருவிடைப் புகழ்ச்சி.

தரைமட ந்தை பரவு மங்கை தனத டம்பொ ருது கின், றிரும ருங்கு லறவ ளைந்து சிறுகி மூவி ரேகை யாய், வரைபி ளந்தொ ரிடிக ரைக்குள் வாழ்ம ரத்தொ டொத்ததா, லுரைக டந்து விடுமுன் மற்றொ ருறுதி தேட நாடுமே. (எஅ)

வம்பைத் தொலைத்துதறி யிறுகிக் கனத்திளகி வருபுடை நெருக்கி வளர்மாக், கும்பக் கடாக்களிற் றினையனைய வுனதுமுலை கொடிதுகொடி தென்று வெருவா, வம்பொற் றனிக்கமல விறைபொரு திடை யென வமுத்துபூ ணென முனிவரோ, டும்பர்க்கு முளமருள வொளிகெழுமி ரேகைமூன் றுலகமோ தெளிவ துமையே. (எகூ)

---

வையும் ஒக்கும். இவையன்றிப் பிறிதொன்றாகவு முரைத்தல் யாதலொப்புடைத்தாம். எ - று. தனத்து அத்துச்சாரியை.

(எஅ) மங்கை விளிப்பெயர். இரேகை - உந்தியின்கீழிருக் கும்வரைகள். ஓர்கொம்பானது ஒடியவளையுமளவில் இரேகை ரேகையாய் விடுபடுமாகலின் இரேகையாய் மூவரைபிளந்தென் றார். உரை - அழிவில்லை யென்னும் வாக்கியம். 'உறுதிநாட வெண்ணுமே' என்றும்பாடம்.

(எகூ) கமலவிறைவெருவி இம்முலையை இடைபொருதென் று அழுத்தியபூணென ஒளிகெழுமிரேகையென்க. முனிவருந் தேவருமருள ஒளிவிடும் அத்தகைய இரேகையியல்பை இவ்வுல கினரோ தெளியவல்லராவ ரென்பது கருத்து.

## திருநிதம்பப் புகழ்ச்சி.

கொத்துவிரி யலர்சோலை யிமயவெற் பரசன் மெய்க் குலமலைப் பக்க மெனவா, முத்தனைவி ரிந்தவகலத் தொடுபெ ரும்பார மடையவுரி தம்ப விடையே, யெத்தனைபெ ரும்புவன மிற்றுலு மழிவிலையி தற் கெனச் சேம நிதிபோல், வைத்தது பரந்திடங் கொண்டுலகை யிடமற வருத்தவோ மதுர வமுதே.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

## திருத்தொடை முழந்தாள்களின் புகழ்ச்சி.

பொற்கதலி புறங்காட்டுங் குறங்கால் வேழப் புழைக்கைதடிந் துஞ்சிவனைப் பணிந்து தேய்ந்த, வற்கடின முழந்தாளிற் கும்பஞ் சாய்த்து மணிமருப் பைக் கனதனத்தால் வளைத்து மம்மே, நிற்கடின கோபமம ராமை கண்டோ நித்தரதன் றுெருக்கு ரித்த துடுத்த நேயம், பிற்கருதி யிவளுறுப்போ டுவ மை வீறு பெற்றதிது வென்னுமிந்தப் பெருமை கண்டோ. (அக)

---

(அ0) இமயவெற்பரசனது உடலாகிய குலமலையினது பக்க மென அவ்வளவுவிரிந்த அகலத்தோடு பெரிய உலகபாரமுற்றும் நிதம்பத்தின்கண் சேமநிதிபோலவைத்து உலகை வருத்தவோ? வருத்தற்கன்று; வாழ்வித்தற்கே: எ-று. நிதம்பம் யாவுமொடு ங்கித்தோற்று தற்கிடமாகலின் இங்ஙனங் கூறியவாறு.

(அக) குறங்காற் புழைக்கைதடிந்தும், முழந்தாளாற் கும்ப ஞ்சாய்த்தும், அக்கனதனத்தால் மணிமருப்புவளைத்தும், நின் கோபந்தணியாமை கொண்டோ? நித்தர் அவ்வேழத்தின்றுே லையுரித்தது. பிற்கருதியுடுத்தநேயம் பலவவயங்கட்கு அவ்வே ழம் உவமையாதற்பெருமை குறித்தோ? எ - று.

### திருக்கணைக்காற் புகழ்ச்சி.

உம்பர்தொழுந் தொறுமகுடச் சாணை தீட்டி யொளிருநக நுனைக்கணையோ ரைந்து மைந்தும், செம்பொன்மணிக் கணைக்காலா மிணைப்பொற் றூணி சேர்த்தன்றோ சிவன்பகைவே டீரு கின்று, னம்பொ ருபத் தளித்தனையின் றன்றுபோல வைங்கணைதொட் டழியினது பழுதென் றன்றோ, வம்பமருங் கனதனப் பொற் றிருவே யுன்றன் மனவிரகின் செயலொருவர் மதிப்ப தன்றே. (அஉ)

### திருவடிப்புகழ்ச்சி.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

உளமகிழ் மகிழ்நர் சென்னி யுறுநதி விளக்க மா யோன், கிளர்முடிப் பதும ராகக் கேழொளி செம் பஞ் சேய்க்கு, முளரிநின் பதங்கள் வேத முடியுறப் பதித்த தவ்வா, றெளியவென் றலைமேல் வைக்கவிரங் குவ தென்று தாயே. (அஈ)

அரியமென் காவி னீபுக் கசோகினிற் பாத மேற்ற, வுரியநம் பதத்தை யீதோ வுறுமெனப் பொருது

---

(அஉ) மகுடச்சாணை - மகுடமாகிய தீட்டுகல். நுனை-நுனி. கணையோரைந்துமைந்தும் என்றதும், அம்பொருபத்தென்றதும் கால்விரல்கள்பத்தையுமாம். தீர்க்கின்றுன் முற்றெச்சம். அன்று ஓ ஏ அசைகள். பழுதென்று அளித்தனையென இயையும். மனவிரகு - மனத்திற் கோசரிக்கும்நினைவு.

(அஈ) மிக்க காமம்விளைக்கவேண்டி நீ சூடுதலால் மனமகிழ்ந் திறைஞ்சும் நின்கணவருடைய முடியிலுள்ள கங்கையாறுவிளக்க; மாணிக்கவொளியானது ஊட்டிய செம்பஞ்சைநிகர்க்கின்ற தாமரைபோலும் நின்பதங்கள் என்க.

பெம்மா, னெரியுற மரத்தை நோக்கு மியல்பினைக் கேட்டும் யானுன், வரிமலர்ப் பாதம் போற்றும் வள மினி தினிது மாதே. (அச)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மறும டந்தையை மொழிய நின்பத மலர்வெ குண் டர னுதலிலோர், முறைய றைந்திட விழியி னும்பட முதுப ழும்பகை கருதிவே, ளிறையை வென்றனன் விழியை வென்றன னெனமு ழங்கிய குரலெனு, தறை சி லம்பெழு மரவ மென்பதெ னருண மங்கல கம லையே. (அரு)

இமநெ டுங்கிரி யுலவி யுங்கவி னெழுநி ரந்தர மல ருமே, லமர்பெ ருந்திரு வருளு நின்பத வருண முண்

(அச) வரிமலர்ப்பாதம்-வண்டுகள் மொய்த்தமலர்போலும் பாதம். வண்டு - சிலம்பிலழுத்தியநீல மணிக்குவமை. இனி தினிதென்பது - கைப்பது கைப்பது என்றும் இழிவுப்பொருள் படநின்ற குறிப்புமொழி.

(அரு) சிவன் தன்பாலூடவேண்டி மறுமடந்தையாகிய கங் கையைநோக்கிச் சரசமொழியாக மொழிந்து அதுகாரணமா கத் தேவிபானிகழ்ந்த வூடலைத்தணிக்கப் பணிதலும், தேவி பதம்வெகுண்டு தீக்கண்ணினுந் தாக்கும்படி நெற்றியிலுதைத் தலும் அத்தேவி பாதத்தைப்பற்றியிருக்கும் மதன் என்னை வெ குண்டஇறைவனை வென்றேன்; என்னைஎரித்த விழியையும் வெ ன்றேனென முழங்கிய முழக்கத்தைச் சிலம்போசையென்பர். இஃதென்? எ - று.

(அசு) விமலையென்னுமுதல்வியே! நின்பத அருணமுண்ட கம் கவினெழும், மலரும், மேலுலகத் தமரும் பெருந்திருவளி க்கும். அக்கமலமலரோவெனின் இதழ் கருகுதலடைய முகு

டக மனையதோர், கமல மென்பது பனியில் வெந்திதழ் கரிய கங்குலின் முகுளமாய், விமலை யின்திரு மனை யெ னும்பெயர் விளைவ தொன்றல முதல்வியே. (அசா)

பஞ்ச முத்தினும் வாடு நின்பத பங்க யத்திணை யொப்பென, விஞ்சை கற்றவர் வன்பு றக்கம டத்தை வீணில் வியப்பரா, மஞ்ச னப்புய றங்கை நின்வர ரம்மி மீதிலும் வைப்பராம், வஞ்ச கக்கொடு நெஞ்ச ரத்தனை வல்ல ரல்லர் நினைக்கினே. (அஎ)

அற்ற வர்க் கருள் செய்யு மம்மைநி னற்பு தப்பத மம்பொனு, டுற்ற வர்க்கருள் பொற்ற ருத்தர வூட றிங் கில மென்னவே, முற்று பொற்பர மாதர் கைத்தல முண்ட கங்குவி வெண்ணிலா, நற்றி றத்தொடு நாடி நாடிந கைக்க வாளுகி ரென்பரே. (அஅ)

---

ளமாய் இனியதிருவின்மனை யெனும் பெயர்பெறுமாவலின், இது வுமதுவும் ஒன்றல்ல, வேறுபாடுடையவாம். எ - று. பாததா மரை திருவைக்கொடுக்கும். அது திருவைக்கொடாது தன்னி டத்தே வைத்திருக்கும் என்பதோர் நயமுங்காண்க.

(அஎ) திருமாலின் தங்கையே வியப்பவரும் வைப்பவரும் வஞ்சகக்கொடுநெஞ்சர். அன்றியும் அப்பதத்தின் மென்மைத் தன்மையறியும் அவ்வளவுவல்ல ரல்லர். எ-று.

(அஅ) கொடைவாய்ந்த பொற்றரு பொன்னுட்டவர்க்குத் தன்னுலளிக்கவல்லதையளிக்க (அதுகண்டு நமக்கெதிராக இது கொடுப்பதனை) உட்புகுந்தறிந்திலேமென நின்பதம் நாடிநகைக் க அந்நகையை யாவரு நகமென்பர். யாதுகருதியோ? எ - று. அரமங்கையர் கரமுண்டகங்குவியுமாறு வெண்ணிலவெழும்படி அக்கற்பகத்தருவைச் சிறுமைப்படுத்தி நகைக்குநகை. என்க.

செய்ய பஞ்சகு ழம்பெ ழும்புனல் செல்வி நின்பத நல்கவே, துய்ய பங்கய வாணி தம்பல வூற றய்த்த சொல் வாணர்போன், மைய னெஞ்சுறு மூம ருங்கவி வாண ராகிம லிந்ததான், மெய்யடங்கலு மூழ்கு முன்கவி வீறு நாவில டங்குமோ. (அகூ)

கலிவிருத்தம்.

நாடியுன தற்புத நடைத்தொழில்ப டிக்கும்
பேடைமட வன்னமொடு பேதநடை கூறு
மாடகம ணிப்பரிபு ரத்தரவ மம்மே
யேடவிழ்ம லர்ப்பதமி ரைக்குமறை போலும். (கூ0)

தோகைநின்ம லர்ப்பத சுடர்க்குடையும்வெய்யோ
ளுகமணி செய்வதொர்க ணுடிவடி வாகு

---

(அகூ) செம்பஞ்சி னிறம்குழம்பவெழும் பாதசலத்தைத் திருவடிநல்க; அதையருந்தி ஊமருங்கவிவாணராகி மலிந்த தால் நினதுமேனியெங்கும் நிறைந்த கவியின்மிகுதிகூறின் ஒரு வர்நாவிலடங்குமோ? அடங்காது. எ - று. குழம்ப என்பதில் அகரந் தொக்கது.

(கூ0) நடைத்தொழில் நாடிக்கற்கும் அன்னத்தின்பால் நடையின்பேதத்தைவிளக்கும் பரிபுரத்தினரவம்போலும். எ-று.

(கூக) பாதவெளிக்கு அஞ்சிய சூரியன் தேவிவடிவத்தின் செந்நிறத்தைப் பெற்றுத் தன்வடிவை அழகுசெய்து கொள்வ தற்குக் கண்ணுடியின் வடிவாவன்; அங்ஙனமே பாதத்தினது கொடைக்குஅஞ்சிய மயக்கமிக்க சந்திரனும் அக்கண்ணுடியின் வடிவாகித் தன்பாற் பிரதிபலித்த உன்னுடைய முகமாகிய தாமரையை என்னிதயமாகிய தாமரையென்று சொல்வன். எ- பாதச்சுடர்க்கு உடையும்வெய்யோ னென்றமையின், அருத்தா

மோகமதி தானுமது வாகியுன்மு கஞ்சேர்
கோகனத மென்னிதய கோகனத மென்னும். (சூக)

அன்பினரி ரப்பதினி ரட்டியருள் செய்யு
நின்பதத ருத்துணர்நி றைந்தொளிர்வ னப்பா
மின்பமுறு தேன்முழுகு மென்னிதய வண்டின்
றன்புளக மெய்க்களி தழைக்கவரு டாயே. (சூஉ)

பலஅவயங்களின்மேலும் எழுழுள்ளன்பு.

ஓதியிருண் மூரலொளி யுற்றகுழை வாக
மோதுமுலே யற்பவிடை முற்றுமு னிதம்ப
மாதிபர னின்னருடி ரண்டருண மாகு
மாதுநின்ம லர்ப்பதம னத்தெழுதி வைத்தேன். ()

செல்வப்புகழ்ச்சி.

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

தூயமதி மரகதச்செப் பொளிர்கலேயுங் களங்கமு
நேர் சொல்லுங் காலேக், காயுமதி தவளகருப் பூரசக
லத்தொடுகத் தூரி போலு, நீயருந்த வருந்தவவை

பத்தியால் கொடைக்குஅஞ்சிய சந்திரனென்பது வருவிக்கப்பட்டது.

(சூஉ) பததருத்துணர் - பாதமாகிய கற்பகத்தருவின் பூங்கொத்து. எனதுஇதயவண்டினது புளகமும் கெடாதகளிப்பும் மேன்மேலதிகப்பட அருள்வாயாக. எ-று.

(சூங) ஆதிபரனது அருள்திரண்டு செவ்வுருக்கொண்டமாதே! இருண்ட ஓதிமுதலியவற்றை மனத்தெழுதிவைத்தேன். எ-று. நீ காத்தருள், என்பது இசையெச்சம்.

(சூச) மதியாகிய மரகதச்செப்பி லொளிர்கின்ற சோடசகலேயும் அதனடுக்களங்கமும் ஒப்புரைக்குங்கால் ஒளிர்கின்ற மிக்கவெளுப்பையுடைய கருப்பூரத்துண்டத்துடன் கஸ்தூரிபோ

குறைதொறுமவ் விரண்டுமெய னிறைத்தல் போலுங்,
தேயுமது வளருமது திங்களெளி தோவுனது செல்வ
மம்மே. (கூச)

கலிநிலைத்துறை.

தேவியு னில்லஞ் சிவனுறை யந்தப் புரமானல்
யாவ ருனைக்கண் டெய்துவ ரிமையோர் முதலானே
ராவல்கொ டெய்த்துன் வாயிலி லணிமா திகளாலே
மேவிய சித்திப் பேறுடு மீள்வா ரானுரே. (கூடு)

நாடோறுந் தியானித்துப் பணியுமாறு.

மூவர்ம கேசன் முடிகொளு மஞ்சத் தொழிலாயு
மேவிய படிகத் தனதொளி வெளிசூழ் திரையாயு
மோவறு செங்கேழ் விம்பம தின்பத் தருவாயும்
பாவைநி னகலா விறையொடு நின்னைப் பணிவாமே()

---

லும், அத்திங்களினிடைத்தேயும் அக்கலை பின்புவளர்வது பழுக்காய் வெற்றிலையுடன் அருந்துதலால் அவ்விரண்டுங் குறையுந்தோறும் அயன்கொண்டுவந்து நிரப்புதல்போலும். அதனுல் உனதுசெல்வம் எளிதோ? எ-று. அதிரவளம் - மிகுவெளுப்பு.

(கூடு) வாயிலில் எய்த்துள்ள இமையவராதியோர் அவ்வாயிலிற் காவல்பூண்டுள்ள அணிமாதிகளானே இஷ்டசித்திகளை எய்துவர். எ-று.

(கூகூ) பாவையே! மூவரும் மகேசனும் மஞ்சத்தின் வடிவமாகவும், அதன்மீது மேவிய சதாசிவமூர்த்தியினுெளி அதன் வெளிசூழ்ந்த திரையாகவும், அவ்வெள்ளிய திரைமேல் நிழலிட்ட நினதுசிவப்புநிறம் இருவரின்பமு மிகுத்துத் தோன்றும் உருவமாகவுங்கருதி, அச்சதாசிவமூர்த்தியோடு உன்னைப்பணிவாம். எ-று. 'தனதொளி, என்றது அச்சதாசிவ மூர்த்தியினுெளியை. இன்பத்திநிறம் சிவப்பென்பது நூற்றுணிபு. நின்னகலா - நின்னைவிட்டகலாத என்க.

## கற்புப் புகழ்ச்சி.

கலிவிருத்தம்.

கலைமகளும் பொதுமடந்தை கமலையுமற் றவளே
மலைமகணீ கற்புடைய வனிதையெனப் பகருங்
குலமறைக ளெதிர்கொடுநின் குரவினையு மணையா
முலைகுழையப் புணர்வதுநின் முதல்வரல திலையால்()

சத்திவடிவெல்லாந் தேவிவடிவெனல்.

வேதியர்க ளயனுவில் விஞ்சைமக ளென்றுஞ்
சீதரன்றன் மணிமார்பிற் செழுங்கமலை யென்று
நாதரிடத் தரிவையென்று நாட்டுவரெண் ணடங்கா
வாதிபரன் மூலபரை யாமளையுன் மயக்கால். (கூஅ)

தியானிப்போரடையுந் தன்மை.

கொச்சகக்கலிப்பா.

அம்மேநின் மெய்ப்பிரிவா மணிமாதி தொழுமழி
யா, விம்மேனி தம்மேனி யெனத்தெளிந்து பாவிப்

---

(கூஎ) இருவரும் கல்விக்கும் செல்வத்திற்கும் உரியவர்மாட் டெல்லா மிருத்தலின், பொது மடந்தைய ரெனப்பட்டனர். சேர்வது முதல்வரல்லது இன்மையால் நீயே கற்பினையுடைய வனிதையென மறைபகரும். எ- று. எனவே, உலகமனைத்திற் கும் நீயே தாயென்றவாறு மாயிற்று. பாதிரி முதலிய பத்து மரங்களுள்ளே குராமரம் நன்மகளிரணைய மலர்வதாகவும் விளையாட்டால் அதுவுஞ்செய்யாமைதோன்ற குரவினையு மணையாத் தனமென்றார்.

(கூஅ) அறிவிற்கடங்காத ஆதிபரனுடைய ஆதிபராசத்தியாகிய யாமளையே! வேதியர் மயக்கினாற் சொல்வரெனவே அம் மயக்கநீக்கித் தெளியின் உன்னையன்றி வேறொரு சத்தியில்லை என்பர் என்றவாராயிற்று.

பார், செம்மேனி யரன்வாழ்வுஞ் சிதைவதெனப் புறக்கணித்து, வெம்மேனி யூழியனற் றீபமிட விள ங்குவார். (கூகூ)

தாமாக வுனைநினைவோர் தவமிறுகத் தனமிறுகி, மாமோகப் புன்முறுவன் மனங்கவரக் கடைவிழி யாற், காமாதி பலருகிப்பக் கடம்பலர்க்கே முறச் சிவனீ, யாமாமென் றயிர்ப்பமய லளிப்பரா லரும் பொருளே. (கOO)

அடியார்பெறும் இருமைப்பயன்கள்.

சுந்தரிநின் ஞெண்டர்தமைத் தோய்வதற்கு நாம களு, மிந்திரையு மலரயன்மா விடருழப்ப விரதி யின்க, ணந்தமில்பே ரழகொடுகெற் பழித்துநெடு நாள் கழியச். சிந்தையுறு பாசம்போய்ச் சிவமயத்தைச் சேர்குவரால். (கOக)

---

(கூகூ) பாவிப்பவர் வெவ்விய மேனியையுடைய காலாக்னி வந்து தீபமாகநிற்க அக்காலத்தும் விளங்குவர். எ-று. அரன் - உருத்திரன்.

(கOO) அரும்பொருளே! நின் சொரூபமாகத் தம்மை நினைவோர் தம்முறுவல் சிவன்மனத்தைக் கவரவும், தங்கண்ணால் காமனுதியர் பலருகிப்பவும் கடப்பலர் நிறத்தராய் நிலவி நீயே யென்றையமுறச் சிவனுக்கும் மயலளிப்பர். எ-று.

(கOக) சுந்தரியே! நின்றொண்டரானவர் தம்மைக் கல்வியுஞ் செல்வமுங்காரணமாக நாமகளும் இலக்குமியும் தோய்வதற்கு அயனுமாலும் இடருழப்பச்செய்து, அளவில்லாத பேரழகினல் (இரதியின்கற்பைக்) காமன்மெலியவழித்து நெடுநாள் வாழ்ந்து பின் சிவரூபத்தையடைவர். எ-று.

## இப்பனுவலை யேற்பித்தல்.

சேமநிதி யேயமுதே தேனேநற் குணக்கடலே,
யாமளையே யன்பர்மனத் திருந்துமுரைக் கடங்காத
கோமளமே யம்மேநின் கோகனகத் தாள்வழுத்து,
மாமறைபோ லென்பாடல் வண்டமிழுங் கொள்வா
யால். (கoஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதவனுக் கவன்கிரணத் தங்கியைக்கொண் டா
லத்தி சுழற்ற லென்கோ, சீதமதிக் கவனிலவி னு
ழுகுசிலைப் புனல்கொடுப சரிப்ப தென்கோ, மோ
தியமைக் கடல்வேந்தை யவன்புனலான் முழுக்கா
ட்டு முறைமை யென்கோ, நீதருசொற் கவிகொ
டுனைப் பாடியுன தருள்பெறுமென் னீதி யம்மே. ()

## நூற் ப ய ன்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேதநுண்பொரு ளாகிசுந்தரி வீறடங்கலு மாய
மே, யீதறிந்துவி டாசொலுங்கவி ராசபண்டிதன்
வீரையா, ஞதரஞ்சகி தாள்பெறுந்திரு நாமமோன்
பது நூறுமே, யோதினின்பல போகமுஞ்சிவ லோக
மும்பெறு வார்களே. (கoச)

சௌ ந் த ரி ய ல க ரி

முற்றிற்று.

---

ஆடி திருவிருத்தம் - கக0.

(கoரு) என்னீதியைச் சுழற்றலென்கோ? உச்சரிப்பதென்கோ? முறைமையென்கோ? நீ சொல்லுவாயாக. எ-று.

(கoச) விடா - விடாது.

உ

சிவமயம்.

# புத்தக விளம்பரம்.

---

## பெரியபுராண வசனச்சுருக்கம்:—

பெரியபுராண வசனமானது விரிவா யிருத்தலால் அஃதை முற்றிலும் வாசித்து நாயன்மார்களின் திவ்யபிரபாவங்களை அறிவதற்கு நாட்செல்லுமென்று அறுபத்துமூன்று நாயன்மார்களின் திவ்வியசரித்திரங்களை ஓர் தினத்திலேயே வாசித்துத் தெரிந்து கொள்ளும் பொருட்டுச் சுருக்கமாகத் திரட்டிப் பூசிப்பதற்கு உபயோகமாகும் பொருட்டு நாயன்மார்களின் திருவுருவச் சித்திரப்படங்கள் (எ௩)ம், உமாபதி சிவாசாரியாரால் திருவாய்மலர்ந் தருளப்பட்ட புராணசாரமுஞ் சேர்த்து சிறியஅளவில் நூதனமாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ... ... 0 12 0

| | | | |
|---|---|---|---|
| தபாற்கூலி அணா ... ... ... ... | 0 | 1 | 0 |
| விவேகசிந்தாமணி ௬௪0-பாடல் புதியபதிப்பு ... | 0 | 2 | 6 |
| சௌந்தரியலகரி குறிப்புரையுடன் ... ... | 0 | 2 | 0 |
| தண்டலையார் சதகம் ... ... ... .. | 0 | 1 | 0 |
| அறப்பளீசுரசதகம் ... .. ... ... | 0 | 2 | 0 |
| குமரேச சதகம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| மணவாள நாராயண சதகம் ... ... . | 0 | 2 | 0 |
| பத்திரகிரியார்மெய்ஞ்ஞானப்புலம்பல் ... ... | 0 | 1 | 0 |